# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 செப்டம்பர் - 2000 இதழ் - 9



அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம். 143:8

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-


*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*

*தபால் பெட்டி எண் 27,*

*காங்கயம்* - 638 701. இந்தியா


குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | காங்கேயம் வாருங்கள் | 09 |
| 3. | இரட்சிப்பின் திட்டம் | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 15 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷம் | 18 |
| 7. | தெரிந்து கொள்ளுங்கள் | 24 |
| 8. | தேவையானது ஒன்றே | 27 |
| 9. | இடறுதலுக்கான கல் | 30 |

THIRUMARAI AASAAN

Published by Church of Christ

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol .13 September- 2000 Issue - 9

*ஆசிரியவுரை*

# நேபோ மலையிலிருந்து..

பரலோகத்தின் தேவனால், மனிதனுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்தில், மலைகள் பல, தேவனால் பயன்படுத்தப்பட்டிருக்கிறதென்பது நம் எல்லோருக்குமே தெரியும். அந்த மலைகளை நாம் உற்றுப்பார்த்தால்,அவைகளிலிருந்து, நாம் நமக்காகச் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியுமென்பது புரியும். உதாரணமாக, மோரியா மலையிலிருந்து (ஆதி.22:1-13) நாம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள முடியும். ஒலிவ மலையிலிருந்து (அப்.1:4-12) நாம் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும். மறுரூப மலை என்றழைக்கப்படும் எர்மோனிலிருந்து(மத்.17அதி) கிறிஸ்துவின் அதிகாரத்தை அறிந்து கொள்ள முடியும். இன்னும் சீயோன் மலையிலிருந்து ஆசீர்வாதத்தை அடைய முடியும். இவைதவிர, சீனாய் மலையும், கலிலேயாக் கடற்கரையிலிருந்து கூப்பிடு தூரத்திலிருந்த, சுமார் அறுபது அடி உயரம் கொண்ட தாபோர் மலையும், தேவச் சட்டங்களை வெளிப்படுத்தும் இடங்களாக தேவனால் பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதும் விளங்கும்.

இந்த மலைகளின் வரிசையில் நாம் இன்னுமொரு மலையையும் சேர்க்கமுடியும். அது தேவனுடைய கண்டிப்புக்கும், கறாருக்கும் அடையாளமாகத் திகழும் ***நேபோ மலை*** இதற்கு ***பிஸ்கா*** என்ற வேறொரு பெயரும் உண்டு. இது, கடல் மட்டத்திலிருந்து சுமார் 4000 அடி உயரம் கொண்டது. பெலஸ்தீனா தேசத்தை இரண்டாகப் பிரிக்கும் யோர்தான் நதிக்குக் கிழக்கே இம்மலை அமைந்திருந்தது இதன் உச்சியில் ஏறி நின்று, யூதாவின் மலைநாட்டை, ஒருவன் நன்றாகப் பார்க்க

முடியும். முற்பிதாக்களுக்குவாக்குத்தத்தம் செய்யப்பட்ட, புண்ணிய பூமியை, மோசேக்குக் காண்பிக்கும்படி தேவன் இந்த மலையைத் தான் தெரிந்து கொண்டார். கன்மலையைப் பார்த்து ***"பேசு"*** என்ற தேவ கட்டளைக்கு மாறாக அதை ***"அடித்ததினிமித்தம்" "வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசம்"*** மோசேக்கு ***"தடைசெய்யப்பட்ட தேசமாக"*** மாறிற்று (எண்.20:9-11)

தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையாயிருந்தவனுக்கு, இப்படியொரு நிலையா என்று இப்பகுதியைப் படிக்கும்போதெல்லாம், அநேகராகிய உங்களைப் போலவே எனக்கும் மனம் பதைக்கும். மோசேக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையின் தன்மை, மிகக் கடுமையாக இருப்பதால், ஒருவேளை தேவன் தவறு செய்துவிட்டாரோ என்று கூட எண்ணத் தோற்றும். ஆனால், தேவன் நீதிபரர். நான்காயிரம் ஆண்டு கால சரித்திரத்தை உள்ளடக்கிய வேதாகமத்தில் ஓரிடத்தில் கூட அவர் தவறிழைத்ததாக நாம் காண முடியாது. ஆகவே அவருடைய நீதியில் இங்கும் குறை இருந்திருக்க முடியாது. அப்படியானால் இப்பகுதியைப் படிக்கும்போது, நமக்கு நேரும் நெருடலுக்கு அடிப்படை என்ன என்ற கேள்வி எழுகிறது. நம்முடைய அறிவு குறைவுள்ளதாயிருக்கிறபடியாலும், மனிதர்களாகிய நாம் முகத்தைப் பார்த்து தீர்மானிக்கும் பழக்கத்திற்கு நம்மையும் அறியாமல் அடிமைப்பட்டு விட்டதாலும், மோசே தன்னுடைய தியாக செயல்களால் நம்முடைய நெஞ்சில் நெடிதுயர்ந்து நிற்பதாலும், இந்த மோசேக்கு இப்படியொரு தண்டனையை திடீரென வேதாகமத்தில் நாம் காணும்போது, அதை உடனடியாக ஏற்று, அங்கீகரிக்க நம்முடைய பாரபட்ச மனது மறுத்துவிடுகிறது. ***"ஐயோ பாவம் மோசே"*** என்று தான் எண்ணத் தோன்றுகிறதேயொழிய ***தவறுக்குத் தண்டனை*** என்று எண்ணமுடியவில்லை. இதற்கு காரணம், அந்தத் தண்டனையிலடங்கியிருக்கும் ***"தேவநீதி"*** நம்முடைய அறிவுக்கு எட்டாதது தான். ஒருவனுடைய அறிவுக்கு, ஒரு காரியம் எட்டவில்லையென்பதற்காகவே, ஒரு காரியம் தவறாகிவிடாது, அப்படித் தானே!

நம்முடைய, உடனடி அறிவுக்கு எட்டாத இதைப்போன்றதொரு சம்பவம் புதிய ஏற்பாட்டிலும் உண்டு. நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, பிறவிக்குருடனை சுகமாக்கின சம்பவம் அது.(யோவான் 9:6,7). பிறவிக் குருடனாயிருந்து ஒரு எட்டு எடுத்து வைப்பதற்குத் தடுமாறும் ஒருவனுடைய முகத்தில், உமிழ்நீரினால் உண்டாக்கிய சேற்றைப்பூசி, கொஞ்ச தூரத்திலுள்ள சீலோவாம் குளத்தில் போய்க் கழுவு என்று இயேசு கட்டளையிடுகிறார். இங்கும் கூட நமதாண்டவரின் செயல், நம்முடைய அறிவோடு சண்டையிடுகிறதாகவே இருக்கும். அதற்காக, அவரின் செயலை நாம் குற்றப்படுத்திவிட முடியுமா? நிச்சயமாக முடியாது. ஏனெனில் ***"அவர் பாவஞ் செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" என்று*** (1.பேதுரு 1:22) பரிசுத்த ஆவியானவர், பேதுருவைக் கொண்டு திட்டவட்டமாகக் கூறுயுள்ளார்.

சரி,மோசேக்குத் தரப்பட்ட ***"அனுமதிமறுப்பு"*** அப்பகுதியை வாசிக்கின்ற நமக்கே, கணக்கில்லா கவலையைக் கொடுக்கிறதென்றால், அது மோசேக்கு

எப்படியிருந்திருக்குமென்று அப்படியே கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். வணங்காக் கழுத்துள்ள ஜனங்களை வழிநடத்துவதற்கு அவன்பட்ட பாடுகள் என்ன கொஞ்சமா, நஞ்சமா? தன்னுடைய நாற்பதாண்டு கால அனுபவங்களையெல்லாம் தன் எண்ணங்களிலே தேக்கி, நெஞ்சிலே சுமந்து, அய்யகோ, இப்படியாகிவிட்டதே என்று கலங்கி, சோகமே உருவெடுத்து, அந்த நேபோ மலையிலே நின்ற காட்சியை வர்ணிக்க என்னிடத்தில் வார்த்தைகள் இல்லை. அதை உங்கள் கற்பனைக்கே விட்டு விடுகிறேன்.

கானானுக்குள் கால் வைக்கும் உரிமையை மோசேயிடமிருந்து தேவன் பறித்திருந்தாலும், அதை அவன் தன் கண்களால் காண இரங்கங்காட்டினார். *"அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, தாண் மட்டுமுள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும் நப்தலி தேசம் அனைத்தையும், எப்பிராயீம், மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசிச் சமுத்திரம் வரைக்குமுள்ள யூதா தேசம் அனைத்தையும், தென் புறத்தையும், சோவார் வரைக்குமுள்ள பேரீச்சை மரங்களின் பட்டணம் என்னும் ஊர் முதற்கொண்டு, எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி; நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும்; யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இது தான். இதை உன் கண் காணும்படி செய்தேன். ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்து போவதில்லை என்றார்"* (உபா.34:1-4).

அங்கே தேவன் நேபோ மலையிலிருந்து, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை தொய்ந்து போன நிலையிலிருந்த மோசேக்குக் காட்டினபோது ஒருவேளை அவன் தன் புறக் கண்களால் அந்த அழகிய கானானைக் கண்டு சற்று ஆறுதலடைந்திருந்தாலும், அழுது வடிந்து கொண்டிருக்கும் தன் அகக்கண்களால், வேறு சிலவற்றையும் அவன் கண்டிருக்க வாய்ப்புள்ளதால், அவைகள் எவைகளாக இருக்கக் கூடும் என்று நாம் கண்டு, அதிலிருந்து சில் பாடங்களை நமக்காகக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

## I. கீழ்ப்படியாமைக்கான விலையை மோசே கண்டிருப்பான்

முதலாவதாக, நேபோ மலையிலிருந்து மோசே தன்னுடைய அகக்கண்களால் தான் கீழ்ப்படியாமல் போன சூழலையும், அதற்காகத் தான் கொடுக்க நேர்ந்த விலையையும் கண்டிருப்பான்.

நன்றிகெட்ட இஸ்ரவேல் ஜனங்கள், தங்களுடைய யாத்திரையில்,ஒரு சமயம், சீன் வனாந்திரத்தின் காதேசிலே தங்கியிருந்தார்கள். அங்கே தண்ணீர் இல்லாதபடியால் வழக்கம்போல, ஜனங்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடினார்கள். வாக்குவாதம் பண்ணி, கலகம் செய்தார்கள். அப்பொழுது, கர்த்தர் மோசேயை நோக்கி;*"நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும், சபையாரை கூடிவரச்செய்து அவர்கள் கண்களுக்கு முன்பாக, கன்மலையைப் பார்த்து பேசுங்கள்...."* என்றார்.

ஆனால்,மோசேயோ, ஜனங்களை நோக்கி:"***கலகக்காரரே கேளுங்கள் என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையை தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்.*** " (எண்.20:1-10).

இங்கே, மோசே ஜனங்களை "***கலகக்காரரே***" என்று கூறினான். ஆனால், தன்னுடைய செயலால், அவன் தானே ஒரு கலக்காரனாக மாறிவிட்டான். அங்கே தேவன், அவர்கள் இருவரையும் "***கலக்காரர்கள்*** " என்று நேரிடையாக குற்றஞ் சாட்டாவிட்டாலும், அதற்கு சற்றும் குறையாத பொருள் தரும்"***அவிசுவாசிகள்*** " என்று அழைத்து தன்னுடைய அதிருப்தியையும், கோபத்தையும் வெளிப்படுத்தினார். ஆம்,"***நீங்கள் என்னை விசுவாசியாமற்போனபடியினாலே, இந்த சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை***" என்றார். (20:12)

மோசேயின் இச்செயல், சங்கீதப் புத்தகத்தில் இவ்விதம் இடம்பெற்றுள்ளது. "***மேரிபாவின் தண்ணீர்களிடத்திலும் அவருக்கு கடுங்கோபம் மூட்டினார்கள்; அவர்கள் நிமித்தம் மோசேக்கு பொல்லாப்பு வந்தது; அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளால் பதறிப் பேசினான்***" (சங்.106:31,32). இங்கே மோசேக்கு நேர்ந்த பொல்லாப்பு, மோசேயின் பொல்லாப்பு என்று நேரிடையாக குறிப்பிடப்படாமல், ஜனங்களின் நிமித்தம் வந்த பொல்லாப்பு என்று சொல்கிறது.ஆயினும், பொல்லாப்புக்கான காரணம் எதுவாக இருந்தாலும் அந்த பொல்லாப்பை, தேவன், மோசேயின் பாவமாகவே எடுத்துக்கொண்டார். ஆகவேதான், அவனை ***அவிசுவாசி*** என்று தீர்த்து, தண்டனையும் கொடுத்தார்.

அருமையானவர்களே! இங்கே நாம் கவனிக்கவேண்டிய இரண்டு முக்கியமான பாடங்கள் இருக்கிறது.ஒன்று, கீழ்ப்படியாமைக்கு ஒருவன் மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டுமென்பது. இரண்டு, நம்முடைய கீழ்ப்படியாமைக்கு, மற்றவகள் காரணமாக இருந்தாலும், தண்டனையை நாம் தான் அனுபவிக்க வேண்டுமென்பது.

ஆம், அந்த நேபோ மலையிலே, அவன் நின்ற பொழுது, தேவனுடைய வீட்டிலே எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தும், தான் செய்த அந்த ஒரே தவறுக்காக, ஒரு பெரிய விலையை கொடுக்க வேண்டியிருந்தது. அப்பொழுது,ஜனங்கள் செய்த கலகமும், அதினிமித்தம் அவன் செயல்பட நேர்ந்த சூழலும், அவன் கண்களுக்கு முன்பாக வந்து, அவனை வாட்டி வதைத்திருக்கும்.

அன்பானவர்களே, ஒருவேளை, இந்த மோசேயைப் போல, நம்முடைய வாழ்கையில் சில நேரங்களில் ***பிறர் நிமித்தம்*** பாவம் செய்கிறவர்களாக இருக்கிறோமா என்று நம்மைநாமே பரிசோதித்து பார்ப்போம். நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில், இந்த மோசே செய்ததைப்போல, ஒருவேளை நம்முடைய பெற்றோர்களினிமித்தம், நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியா மலிருக்கக்

கூடும் அல்லது நம்முடைய வாழ்க்கையின் எதாவது ஒரு கட்டத்தில், தனி ஒருவரிடத்திலோ அல்லது ஒரு ஸ்தாபனத்திடமிருந்தோ பெற்றுக்கொண்ட சரீர நன்மைகளினிமித்தம் நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமலிருக்கக்கூடும்.அல்லது நமக்கு இதுகாறும் உபதேசிக்கப்பட்ட உபதேசங்களினிமித்தம் அல்லது நாம் சார்ந்திருக்கும் ஒரு சபையினுடைய கொள்கைகளினிமித்தம் நாம் தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாகக் கீழ்படியாமலிருக்கக்கூடும். ஆனால், இங்கே ஒன்றை தெளிவாக தெரிந்துகொள்ளுங்கள். நம்முடைய நிர்பந்த நிமித்தங்கள்,நமக்கு கிடைக்கும் தண்டனையிலிருந்து நம்மைக் காப்பாற்றாது. நம்முடைய ***நிமித்தங்கள்*** எதுவாயிருந்தாலும், அதை செய்கிறவர்கள் நாமாக இருக்கிறபடியால், நாம் தண்டனையை அடைந்தே தீருவோம். மோசேயின் நேபோ மலைக் காட்சி இதற்கு மிகச் சிறந்த சான்றாக இருக்கிறது.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையின் காரியங்கள் ஒவ்வொன்றும், தேவனுடைய வார்த்தைகளின்படி இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்து,நலமானதைப் பிடித்துக் கொண்டு வாழ்வோம்.

## II. பாவத்தின் கொடுமையை மோசே கண்டிருப்பான்.

இரண்டாவதாக, இந்த மோசே, நேபோ மலையின் உச்சியிலிருந்து, தன்னுடைய அகக் கண்களால், பாவத்தின் கொடுமையையும், அதன் பயங்கரத்தையும் கண்டிருப்பான்.

ஆம், தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக, அவன் செய்த கீழ்படியாமை என்ற பாவம், காலமெல்லாம் அவன் எதற்காகப் பாடுபட்டானோ அதை அடைய விடாமல் தடுத்துவிட்டது. ஒருவேளை பரமக் கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் அவனுக்குக் கடைசி நாளில் கொடுக்கப்படும் என்பது வேறு விஷயம். (மத்.17; எபி.11அதி). ஆனாலும், இங்கே அவனுக்கு நேர்ந்த ***"கொடுமையின் அளவு"*** மிகப்பெரியது. இந்தக் கொடுமைக்குக் காரணம் பாவமே. தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக ஒருவன் செயல்பட ஆரம்பித்துவிட்டால், அது ஒருவனை எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதற்கு, நேபோவின் மோசே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

தேவனுக்குப் பயப்படும் வாழ்க்கை வாழ்ந்த மோசேயின் வாழ்க்கையிலேயே பாவம் விளையாடி, அவன். அடைய வேண்டிய நன்மையைச் கெடுத்து, அவனைப் பாழ்படுத்தியிருக்கிறதென்றால், அந்தப் பாவம் உங்களையும், என்னையும் சும்மா விட்டுவிடும் என்று நினைக்கிறீர்களா? சொல்லுங்கள். பாவம் ஒருவனைத் தாக்கும் போது, அவன மனோ ரீதியாகப் பாதிக்கப்பட்டு தன்னுடைய விருப்பத்திற்கு மாறாக, காரியங்களைச் செய்கிறவனாக மாறி விடுகிறான். தன்னுடைய நிலையிலே ஒரு தடுமாற்றம் அவனுக்கு ஏற்படுகிறது. இந்நிலை

பற்றி,ஏசாயா தீர்க்கன் இவ்விதம் கூறுகிறான்.“*துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக் கூடாமல் அதின் ஜலங்கள் சேற்றையும், அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்.*” (ஏசா.57:20) இதிலிருந்து,பாவம் ஒருவனை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்க முடியுமென்பது தெளிவாகிறது.

அருமையானவர்களே, பாவத்தைக் குறித்த தம்முடைய நிலை எப்படியுள்ளது? அதன் தன்மையையும், கொடுமையையும் நாம் உணர்ந்துள்ளோமா? தேவனுக்குப் பயந்து வாழ்ந்த மோசே தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகச் செயல்பட்டு,பாலும், தேனும் ஓடுகின்ற கானானை இழந்துபோனது போல, நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில், தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாக வாழ்ந்து பரம கானானை இழந்து போகப் போகிறோமா? எப்படி மோசே, தேவனுடைய வார்த்தைக்குத் தன்னை “*முழுமையாக*” ஒப்புக்கொடுக்கத் தவறிய போது, தீமை அவனைத் தொற்றிக் கொண்டதோ, அதுபோலவே ஆவிக்குரிய வாழ்வில் தேவனுக்குக் கீழ்படியாமல்-அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் ஒருவன் வாழும்போது ஆவிக்குரிய தீமைகள் அவனைத் தொற்றிக் கொள்ளும். மோசே, தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகக் செயல்பட்டது போலவே, அவன் தன்னுடைய வாழ்விலும், தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாகச் செயல்பட ஆரம்பித்து விடுவான். இறுதியில், மோசே, சரீரப்பிரகாரமான கானானை இழந்தது போல, அவனும் ஆவிக்குரிய பரம கானனை இழந்து போகும் நிலை ஏற்படும்.

தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய மறுப்பதினால் உண்டாகும் பல தீமைகள், ஆவிக்குரிய உலகில் தலைவிரித்தாடுகிறதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு தான் உள்ளோம். ஆம், விக்கிரக வணக்கம்; தேர் இழுத்துப் பண்டிகை கொண்டாடுதல், ஏழாம் நாள் உபதேசம், அந்நிய பாஷை குழப்பம், அற்புத அடையாளங்கள் என்ற ஏமாற்று, நீண்ட அங்கிகளை அணிந்து வலம் வருதல், கிறிஸ்துவின் பெயரால் நாட்களை விசேஷித்துக் கொள்ளுதல், ஒன்றான மெய்ச் சபைக்கு விரோதமான உபதேசங்கள், இரட்சிக்கப்படுவதற்குகான போலி வழிமுறைகள், இரண்டாம் வருகைக்கு நாள் குறித்தல் என்று இப்பட்டியலைநீட்டித்துக்கொண்டு போக முடியும்.. இவைகளனைத்தும், தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்படியாமல் போனதால் ஏற்பட்ட தீமைகள் என்பதை நீங்கள் மறந்து விடவேண்டாம். எப்படி மோசே தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்ததால், சரீரக் கானானை இழந்தானோ அது போலவே, தேவனுடைய வார்த்தைகளுக்கு முற்றிலும் விரோதமான மேற்சொன்ன காரியங்களிலிருந்து,நீங்கள் உங்களை உடனடியாக விடுவித்துக் கொள்ளாமல் போனால், பரம கானாகிய பரலோகத்தை இழந்து போவீர்கள்

ஆகவே, நேபோ மலைதரும் இந்த இரண்டாம் பாடத்தைக் கண்ணும் கருத்துமாகப் படித்து எந்தச் சுழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தைக்குப் பயந்து வாழ்ந்து, அவைகளுக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து பரம கானானுக்கான பாக்கியத்தைப் பெறுவோம்.

## III. தேவனுடைய வார்த்தையின் கண்டிப்பை மோசே கண்டிருப்பான்

இறுதியாக, மோசே மலையிலிருந்து, தன்னுடைய அகக் கண்களால், தேவனுடைய வார்த்தையின் கண்டிப்பைக் கண்டிருப்பான்.

கானான் தேசத்துக்குள்ளாக நீ பிரவேசிக்கமாட்டாய் என்று தேவன் சொன்ன அச்சமயத்தில், மோசே அதைப் பெரிதாக எடுத்திருக்கமாட்டான் என்றே சொல்லலாம்.ஏனெனில், ஜனங்களின் பாவத்தினிமித்தமாக, தேவன் கோபப்பட்ட சில சந்தர்ப்பங்களில் தன்னுடைய கனிவான விண்ணப்பத்தால் மோசே தேவனுடைய கோபத்தை ஆற்றி அவருடைய மனதை மாற்றியுள்ளான். (யாத்.12:14, உபா.9:19) அதுபோலவே, தன் காரியத்திலும், தேவன் மனம்மாறுவார் என்று அவன் எதிர்பார்த்திருக்க வாய்ப்புண்டு. எப்படியெனில், தான் கானானைக் காண வேண்டுமென்று தேவனை நோக்கி ஜெபித்துள்ளான் ***“நான் கடந்துபோய், யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டேன்”*** (உபா.3:25) என்றுள்ளது. ஆயினும், மோசேயின் இந்த விண்ணப்பத்திற்கு தேவனின் பதில் என்ன தெரியுமா? ***“....போதும் இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேச வேண்டாம் .... இந்த யோர்தானை நீ கடந்து போவதில்லை”*** என்று மிகத்திட்டமாய் சொல்லிவிட்டார்.


மற்றவர்களுக்காகத் தான் ஜெபித்த போதெல்லாம் தன் விண்ணப்பத்தைக் கேட்ட தேவன், எனக்காக நான் மன்றாடும்போது இப்படி பதில் கொடுத்து விட்டாரே என்றவன் அங்கலாய்திருப்பான். அத்தோடு தேவனுடைய வார்த்தையின் கண்டிப்பை அங்கே கண்டிருப்பான். இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் குறித்து, தாவீது சொல்வதைக் கவனியுங்கள். ***“கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது”*** (சங்.119:89) தேவனுடைய வார்த்தைகள் கண்டிப்பானது மாத்திரமல்ல, அது நிலைத்ததும், முழுமையானதும், இறுதியானதுமாக இருக்கிறதென்பதும் நமக்குத் தெரிந்திருக்கவேண்டும் (வெளி.22:18-19)

அருமையான தேவப் பிள்ளையே, தேவனுடைய கண்டிப்பானதும், நிலைத்ததும், உறுதியானதும், இறுதியானதும், முழுமையானதுமாய் இருக்கிறதென்பது, நம் ஒவ்வொருவருக்கும் மிகுந்த பயத்தை ஏற்படுத்த வேண்டும். தேவனுடைய வார்த்தையின் உண்மைத் தன்மையை அறியாமல் நாம், இறுதிநாளில் ஏமாந்து போகக் கூடாது.

இன்றைக்கு, அநேகர் தேவனுடைய வார்த்தைகளை - அதிலுள்ள உபதேசச் சட்டங்களை அற்பமாய் எண்ணுகிறதை நாம் காண்கிறோம். முடிந்தால் வசனத்தின்படி நடக்கலாம், முடியாவிட்டாலும் பரவாயில்லை என்ற மேம்போக்கான எண்ணம் கிறிஸ்தவத்துக்குள் வெகுவேகமாகப் பரவி வருகிறது. இப்படிப்பட்ட எண்ணங்கொண்ட கிறிஸ்தவர்களுக்கு நேபோ மலை மோசே ஒரு நல்ல உதாரணமாக உள்ளான். தேவனுடைய வார்த்தைகளின்படி காரியம் செய்வது மிகவும் அவசியம் என்பதை, இந்த மோசே நமக்கு உடைந்த உள்ளத்தோடும், வடியும் கண்ணீரோடும் போதிக்கிறார். என் விஷயத்திலே நான் மன்றாடியும் எனக்கு இரக்கங்காட்டவில்லை. ஆகவே, உங்கள் காரியத்திலும் நீங்கள் தேவனுடைய வார்த்தையை மீறி நடக்கிறவர்களாக இருந்தால் அந்நாளில் இரங்கமாட்டார் என்று நம்மையெல்லாம் எச்சரித்து, ஒரு எச்சரிப்பின் சின்னமாக, அந்த நேபோ மலையிலே மோசே நிற்கிறான்.

இவ்வளவு கண்டிப்பான, இந்த தேவனுடைய வார்த்தைகள் தான், நம்மை இறுதி நாளில், நியாயந்தீர்க்கப்போகிறது. (யோவா.12:48) அந்நாளிலே, தேவனுடைய வார்த்தை கண்டிப்பானதாக இருக்கப்போகிறது. அந்நாளில் பிதாவின் சித்தம் செய்யாதவர்களைப் பார்த்து, அதாவது தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களைப் பார்த்து ***"நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவார்"*** (மத்.7:23) ஆம், நியாயத்தீர்ப்பு அவருடைய வார்த்தையின்படி, கண்டிப்பானதாக இருக்கும். தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் என்று பெயர் பெற்ற மேசேவுக்கே ***"தவறுக்கு தண்டனை"*** என்ற கொள்கையைக் கடைபிடித்த தேவன், எனக்கும், உங்களுக்கும் மாத்திரம் சலுகைகாட்டிவிடுவாரா என்ன? நிச்சயமாக காட்டமாட்டார். ஆகையால், நாம் ஒவ்வொருவரும், தேவனுக்குப்பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுவோம். (பிர.12:13)

அன்பானவர்களே, நேபோ மலையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட இந்த மூன்று பாடங்களும், நம் அனைவரின் வாழ்க்கைக்கும் பயன்பட, உன்னதத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக! அதன் மூலம் நீங்கள் பரம கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை பெற்றுக்கொள்வீர்களாக! ஆமென்.



எ.ச.செ. ராஜநாயகம்

ஜெபியுங்கள்! திட்டமிடுங்கள்! பங்குபெறுங்கள்!

## காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரும்
## உலக வீழியோ வேதாகமக் கல்லூரியும்
## இணைந்து நடத்தும்

# மூன்றாம் வேதாகம கருத்தரங்கம்

நாள் : அக்டோபர் 6,7 - 2000
வெள்ளி, சனி (அரசு விடுமுறை நாட்கள்)

நேரம் : வெள்ளி - காலை 9:00 - மாலை 5.00 மணிவரை
சனி - காலை 9.00 - மாலை 1:00 மணிவரை

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு
காங்கேயம் - 638 701.

**பேச்சாளர்கள்** : தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும் தேவ தாசர்கள்

**கருப்பொருள்** : கிறிஸ்துவின் சிலுவை

**THEME** : **THE CROSS OF CHRIST**

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்

**பதிவுக் கட்டணம் ரூ.20/- மட்டுமே**

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.

---

தொடர்பு முகவரி:-

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

போன்: 04257 - 20030

# இரட்சிப்பின் திட்டம்

மனிதன் பாவியாயிருக்கிறான் என்று வேதம் போதிக்கிறது. எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானோம் என்று பவுல் கூறுகிறார் (ரோமர்.3:23). தொடர்ந்து பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் கூறுகிறார். (ரோமர் 6:23) மனிதன் இரட்சிப்பின் அவசியத்திலிருப்பதை இது உணர்த்துகிறது. ஆனால் அவன் எப்படி இரட்சிக்கப்படக்கூடும். வேதாகமம் இதையும் வெளிப்படுத்துகிறது.

மனிதனை தேவன் உண்டாக்கியது மட்டுமின்றி, அவன் தனது சிருஷ்டிகரிடத்திலிருந்து (புறமுதுகிட்டு) மாறிப்போனான் என்பதால், பாவத்திலிருந்து தப்பிக் கொள்ள ஏதுவான வழியையும் (தேவன்) உண்டாக்கினார். இந்தத் தப்பிக் கொள்ளும் வழி தேவனின் இரக்கம், கிருபை மற்றும் அன்பை அடிப்படையாக் கொண்டது. (யோவான் 3:16;எபேசியர் 2:8-9) ஆகிலும் அவர், மனிதன் திரும்ப வரும்படி அவனை பலவந்தம் பண்ணாமல் நம்மிடத்தில் வரும்படி அழைப்புக் கொடுக்கிறார் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அப்படி அவருடைய அழைப்பை ஏற்று வருவோர், தாங்கள் ஏக்கத்தோடு எதிர்நோக்கும் இரட்சிப்பைக் கண்டடைகின்றனர்.

## ஒருவன் இரட்சிக்கப்பட தேவன் அவனிடத்தில் ஐந்து எளிய படிகளை எதிர்பார்க்கிறார்.

1. ஒருவன் சத்தியத்தைக் கேட்க வேண்டும். ***"... இவர் என்னுடைய நேசக்குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்கு செவி கொடுங்கள்" (மத்.17:5). "ஆதலால் விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும்"*** (ரோமர்.10:17)

2. ஒருவன் தேவனிடத்தில் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும். ***"விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறார் என்றும் விசுவாசிக்க வேண்டும்."*** (எபி.11:6) தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்தில் விசுவாமாயிருங்கள் என்று கிறிஸ்து கூறினார்.(யோவான் 14:1) மேலும் ***"யோவான் குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனை காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன் மேல் நிற்கும் என்றான்".*** (யோவான்.3:36) இதுபோல அநேக வசனங்களை இத்துடன் சேர்க்கக்கூடும். ஆகிலும் ஒருவரது இரட்சிப்பிற்கு விசுவாசம் முற்றிலும் அவசியமான ஒன்று என்பதை நீங்கள் காணலாம். மேற்குறித்த வசனங்களில் ஒன்றிலாகிலும் இரட்சிப்பிற்கு விசுவாசம் மட்டும் போதும் என்று குறிப்பிடுவதில்லை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

3. ஒருவன் தனது பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். ***"அப்படியல்லவென்று உங்களுக்கு சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்"*** என்று கிறிஸ்து கூறினார் *(லூக்கா 13:3)* ***"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டும் என்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார்"*** என்று பவுல் பிரசங்கித்தார். (அப்.17:30) ***"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்த தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுபோகாமால் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்"*** என்று பேதுரு எழுதினார். (2.பேதுரு 3:9) மனந்திரும்புதல் என்றால், பாவத்தைக் குறித்த தனது மனதை மாற்றியமைத்தல் என்று பொருள். திரும்பிமாற்றுதிசையில் செல்லுதல் என்று பொருள். இன்னொரு வார்த்தையில் சொன்னால்,பாவம் செய்தலை தவிர்த்தல், ஒருவன் நல்ல வாழ்க்கையைச் செய்ய ஆரம்பிக்குமுன், தான் பாவம் செய்வதை தவிர்க்க வேண்டும் இதைத்தான் கர்த்தர் விரும்புகிறார்.

4. ஒருவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். ***மனுஷருக்கு முன்பாக என்னை அறிக்கையிடுகிறவன் எவனோ, அவனை பரலோகத்திலிருக்கிற என் பிதா முன்பாக அறிக்கையிடுவேன்*** என்று கிறிஸ்துவே கூறியிருக்கிறார் (மத்.10:32) ***நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்*** என்று பவுல் கூறினார் (ரோமர்.10:10) அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன் இந்த அறிக்கையை செய்வதாகக் காண்கிறோம். இது பொதுவாக நல் அறிக்கை செய்தல் என்றழைக்கப்படும். என்ன ஒரு நல்ல அறிக்கையை ஒருவன் செய்யக்கூடும்.

5. ஒருவன் இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். ***விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்*** என்று கிறிஸ்து இதைக் குறித்து தெளிவாகப் பேசுகிறார். (மாற்கு 16:16) பேதுரு அவர்களை நோக்கி, ***நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று , இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தாவியின் வரத்தைப் பெறுவீர்கள்*** என்றான் (அப்.2:38) மேலும் அவர் சொல்லும்போது, ***அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.*** (1பேதுரு.3:21) .இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போககழுவப்படு, என்றான் . (அப்.22:16).

வேதாகமம் ஒரே ஞானஸ்நானம் என்று கூறுகிறது (எபேசியர். 4:5) அது அடக்கம் பண்ணப்படுதல் (கொலோ.2:12).அது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் (அப்.8:36-39) இந்த ஒரு ஞானஸ்நானம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே கொடுக்கப்பட வேண்டும். (மத்.28:18-20) அது ஒருவரை கிறிஸ்துவுக்குள் அல்லது சபைக்குள்ளாக்குகிறது (ரோமர் 6:3-4ல் 1.கொரி.12:13)

இந்த எளிமையான கட்டளைகளுக்கு ஒருவன் கீழ்படிவதன் மூலம், தனது கடந்த கால பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவான், அப்பொழுது கர்த்தருடைய சபையில் அங்கமாகி, தேவனுக்கு ஊழியம் செய்து, தனது வாழ்நாள் முழுவதும் உண்மையாயிருந்தால், பரலோக வாசியாகும் சிலாக்கியத்தைப் பெற்ற ஒரு கிறிஸ்தவனாகிறான். இவ்விஷயங்களை இன்றே ஏற்றுக்கொண்டு செயல்படும்படியாய் வேண்டிக் கொள்கிறோம்.

**J.C.Choate** **J.C. சோட்**

## வாசகர்களின் கவனத்திற்கு

1. *விலாசம் மாறிச் செல்லும் வாசகர்கள், தங்கள் பழைய மற்றும் புதிய விலாசம் இரண்டையும், அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்* (Pin code), *ஓர் அஞ்சல் அட்டையில் தெளிவாக எழுதி அனுப்புங்கள்.*
2. *புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகளுக்காக மணியார்டர் செய்பவர்கள்,* M.O. *கூப்பனில் உள்ள* Space for Communication *பகுதியில், உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள்.*
3. *இரண்டு* **திருமறை ஆசான்** *மாத இதழ் பெறுபவர்கள், உடனடியாக எங்களுக்கு தகவல் கொடுங்கள். இது, பத்திரிக்கையை, தேவையிலிருக்கும் மற்றவர்களுக்கு அனுப்பிக் கொடுக்க உதவியாக இருக்கும்.*

*நன்றி!*

***ஆசிரியர்.***

# பெண்களின் பங்கு என்ன?

## வீட்டில் பெண்களின் பங்கு

கணவனின் வேலை என்னவெனில், தன்னுடைய குடும்பம் வாழ்வதற்கு வேண்டிய சம்பாத்தியத்தை செய்வதும், தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் பாதுகாப்பதும், தன்னுடைய குடும்பத்திற்கு தலைவனாக இருப்பதுமேயாகும். அத்தோடு தன் குடும்பத்தாருக்கும், உலகத்திற்கும் இடையில் நிற்பவனாகவும், அவர்களுடைய தேவைகளை சந்திப்பவனாகவும் இருக்கிறான். ஏனென்றால் அவன் வெளியே சென்று வேலை செய்கிறவனாகவும், கடினமும், அநீதியும் நிறைந்த உலகிற்குள்ளே சென்று பழக வேண்டியவனாகவும் இருக்கிறான். ஆணானவன் சரீரத்திலும், மனதிலும் பலமுள்ளவனாக படைக்கப் பட்டிருக்கிறான். ஆனால் பெண் அப்படியல்ல. ஆணுடைய வேலைக்கேற்ப தேவன் அவனை வனைந்திருக்கிறார். ஆனால் தன்னுடைய வேலைகளை சிறப்பாக செய்ய வேண்டுமானால் அவன் தன்னை பல வழிகளிலும் தயார் செய்து கொள்ளவேண்டியது அவசியம்.

ஆனால் மனைவியோ வீட்டை கவனிக்கவும், குடும்பத்தின் தேவைகளை அறிந்து செயல்படவும் விருப்பமுள்ளவளாயிருக்கிறாள். இதற்கு விசேஷமான பலம், இரக்க சுபாவம், பொறுமை, புரிந்து கொள்ளுதல், அத்தோடுகூட, கீழ்ப்படிதல், மரியாதையுள்ள பிள்ளைகளை வளர்க்கக் கூடிய அதிகாரம் இவையாவும் தேவைப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல்.எபேசி. 6:4-ல் ***"பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக"*** என்கிறார். இது இரண்டுவிதமான காரியங்களை நமக்கு போதிக்கிறது. முதலாவது பெற்றோர்கள் ஞானத்தையும், பகுத்தறிதலையும் உபயோகப்படுத்தி தங்கள் பிள்ளைகளை எப்படி கையாள வேண்டும் என்று அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும் போது பிள்ளைகள் எதிர்ப்பு குணம் இல்லாமல் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்வார்கள். இரண்டாவதாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தேவனுக்கு முன்பாக பயிற்றுவிக்கிறவர்களாக இருக்கவேண்டும்.(அப்படியென்றால் கிறிஸ்தவர்களாக இருப்பதற்கான செயல்பாடுகள், வேலைகள் இவற்றில் அவர்களை வழிநடத்துதல்) பிறகு போதனை செய்வது (பரிசுத்த வேதாமத்தைப் பற்றி தெளிவாக போதிப்பது) இப்படி செய்வதால் அவர்கள் நல்ல விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக வளர்வார்கள்.

## சமுதாயத்தில் பெண்களின் பங்கு:

முதலாம் நூற்றாண்டிலே பெண்கள் சபைக்கு எந்தவித அவமானத்தையும் ஏற்படுத்தக்கூடிய காரியத்தைச் செய்யக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருந்தனர் (1தீமோ.5:13,14;தீத்து 2:5) நம்மை சுற்றியுள்ள சமுதாயத்தை விட்டு நாம் பிரிந்து வாழ முடியாது. நம்முடைய செயல்பாடுகள் சுவிசேஷத்தின் ஒளியாக இருக்கவேண்டும். பெண்களோடு சேர்ந்து ஆண்களும் உலகத்திற்கு ஒளியாக இருக்கவேண்டும். (மத்.5:14) நாம் அவ்வாறு இருக்கும்போது இயேசுகிறிஸ்து நம்மோடு இருக்கிறார் (2.கொரி.5:19,20) பெண்கள் எப்போதும் நிதானமாய் இருந்து, தேவனுடைய வழியிலே நடந்து நண்பர்கள்,மற்றும் அயலகத்தாரிடம் பழகும்போது ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இப்படியாக நாட்கள் செல்லச் செல்ல கிறிஸ்தவத்தின் மகிமையை, அதின் உண்மையை அவிசுவாசிகளுக்கு கற்றுக்கொடுக்க முடியும்.

பெண்கள் தங்களுடைய வாயின் வார்த்தையாலே மற்றவர்களுக்கு போதிக்க முடியும். அயலாகத்தாருடைய வீட்டிற்குச் சென்று வேத வசனத்தை கற்றுக்கொடுக்க சமயம் தேடிக் கொண்டிருக்க வேண்டும். சில வேளைகளில் தங்களுடைய அயலகத்தாரை ஒரு காலை வேளையிலோ அல்லது மாலையிலோ வீட்டிற்கு அழைத்து அவர்களுக்கு ஒரு சிற்றுண்டி கொடுத்து சத்தியத்தை அவர்களோடு படிக்க வேண்டும்.

பெண்கள் மற்றவர்களை ஆராதனைக்கு அழைத்து வரமுடியம். தங்களுடைய பிள்ளைகளோடு அண்டை வீட்டு பிள்ளைகளையும் ஆராதனைக்கு அழைத்துச் செல்லுதல், வேதாகம வகுப்புகளில் பங்கெடுக்க வைத்தல், தேவனைப்பற்றி சொல்லிக் கொடுத்தல் போன்ற காரியங்களினால் பெண்கள் அநேகரை கர்த்தருக்குள் கொண்டுவந்திருக்கின்றனர்.

*(தொடரும் .......)*

**பெட்டிசோட் ரேச்சல் இராஜநாயகம்.**

## இதோ ஓர் அரிய வாய்ப்பு

ஒவ்வெர்ரு செவ்வாய்கிழமை தோறும் காலை 7.00 மணி முதல் **7.30 மணி வரை** **விஜய் டி.வி.** யில் **திருமறை நேரம்** என்கிற நிகழ்ச்சி ஒளிப்பரப்பாகிறது. இந்நிகழ்ச்சியை சென்னை வேதாகம கல்லூரியின் கல்வித்துறை தலைவர் **சகோ. பீட்டர் சாலமோன்**, அவர்கள் தொகுத்து வழங்குகிறார். இந்நிகழ்ச்சியின் மூலம், நீங்கள் உண்மை சத்தியத்தை அறிந்துக்கொள்ளும் வாய்ப்பு பிரகாசமாக இருப்பதால், இந்நிகழ்ச்சியை தவறாமல் கேட்டு பயனடைய வேண்டுகிறோம்.

ஆசிரியர்

வாலிபர் பகுதி

# விரைந்து வாருங்கள்

*"உதவிக்கு வாருங்கள்"* என உரக்கக் கூவினாலும் *"ஆபத்து அண்டுகிறது அடைக்கலம் தாருங்கள்"* என அறைகூவல் விடுத்தாலும் *"போருக்குப் புறப்படுங்கள்"* என பேரொலி பெருக்கினாலும் விரைந்து புறப்பட்டு அழைத்த நோக்கம் நிறைவேற்றிவிடுவார்கள் வாலிபர்கள் என உணர்ந்தவனாக, விண்ணகம் விடுத்து, மண்ணகத்தில் மலர்ந்து, மாந்தர்களின் மீட்புக்காய், மாளாத துயர்பட்டு, மாண்ட நம் மீட்பர் கல்லறையின் காவலையும், தடுத்து நின்ற கல்லையும் தகர்த்தெறிந்து மரணத்தை ஜெயித்தெழுந்ததைக் காண **விரைந்து வாரீர்** என அழைத்து நிற்கிறேன்.

முன்னுரை நூற்படி மேதினியில் மேவிவந்த மேசியா இவர்தான் என யூதர்கட்கு உணர்த்திட தூய ஆவியின் துணைகொண்டு, தன் நூலை யாத்துக் கொடுத்த மத்தேயு தன் இறுதி அத்தியாயம் 6,7வது வாக்கியத்தில் ***கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள், சீக்கிரமாய்ப் போய் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்கு சொல்லுங்கள்*** என எழுதிக்கொடுத்திருக்கிறார். கல்புரட்டி திறந்து கிடக்கும் கர்த்தரின் கல்லறையைக் கண்டு இளைஞர்களான நமக்கு இன்றியமையா தவைகளை கற்றுக் கொள்வோம்.

## I. வந்து பாருங்கள்

பாதகப் பசாசினால் மானுடத்திற்கு வழங்கப்பட்ட மரணத்தை, உள்ளம் வெம்பி, உதிரம் சிந்தி, ஊன் மெலிந்து உயிர் கொடுத்து, உயிர்த்தெழுந்து, முறியடித்து, முடித்துவைக்கவேண்டுமென கள்ளர் ஸ்கையில் மரணத்தை ருசிபார்த்த இயேசுவின் கல்லறைநோக்கி, பாசத்தால், படபடத்து, கண்ணீர் மல்க வந்து கொண்டிருந்த மாதர்கள், கல் புறட்டப்பட்டது கண்டு கலங்கினப்போன வேளையில், ***"அவர் இங்கே இல்லை தாம் சொன்னபடியே உயர்த்தெழுந்தார் கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்"*** என கூறின தூதனின் குரல் கேட்டார்கள்(மத்:28:6)

மரணத்தின் சங்கிலிகளை நொடியில் தெறிபடச் செய்த நமதாண்டவரின் உயிர்த்தெழுதல் நம்மை ***"வந்து பாருங்கள்"*** என அழைக்கிறது. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்த எம்பெருமான் இயேசு, மனிதனை தேவனிடத்தில் திரும்பும்படி அழைக்கிறார் (லூக்கா 19:10) உயிர்த்தெழுதலின் வல்லமையை அக்கிரமத்தினால் அடக்கி வைக்க முயன்று, கல்லறையின் காவலாளிகளின் கவனக்குறைவில் கர்த்தரைக் களவாய்க் கொண்டுபோனார்கள் என கதைகளை கட்டவிழ்த்துவிட்டார்கள் கயவர்களான யூதமதத் தலைவர்கள்.

கள்ளப்போதகத்தை வசனமெனும் சம்மட்டியைக் கொண்டு அடித்து நொறுக்கும் வேதாகமம், இதற்கும் விடைதரும் என உணர்வீர் வாலிபரே! யோவான் எழுதின நற்செய்தி நூலில் உயிர்த்தெழுதலின் சம்பவத்தைப் பற்றி எழுதும்போது ***"சீலைகள் கிடக்கிறதையும் அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்ற சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்"*** என்கிறார் (யோவான் 20:2) சீமோன் பேதுருவுடன் கொல்கொதா சென்று வாலிபர்கள் நாமும் கல்லறையை கூர்ந்து காணும் போது, திருடிச்செல்கிறவர்கள் சடலத்தில் சுற்றியிருக்கும் சீலைகளை சாவகாசமாய் தங்கள் சௌகரியப்படி கழற்றி, சுருட்டி வைத்துவிட்டு சென்றிருக்க முடியுமா?, அதுவும் உலகாளும் ரோமக்காவலின் கெடுபிடியின் மத்தியில் இப்படிச் செய்யதிருக்க முடியுமா? கல்லறையை வந்து கவனித்துப் பார்த்த பின் சொல்லுங்கள் வாலிபர்களே!

வாலிபர்களாகிய நாம் தெரிந்துகொள்ள வேண்டிய மற்றொரு காரியம் யாதெனில், கர்த்தர் கல்லறையை விட்டு எழுந்தார் என்பதைக் குறித்து கயவர்கள் மலைசாரலென கதை கட்டினாலும், மரணத்தை வென்ற ஜெய வேந்தராகிய இயேசுவின் உயிர்ப்பின் சாட்சிகளாய், அதிகாரிகளின் அடக்குமுறைகளையும், மெய் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுததினால், தொழுமரங்களையும், சிருஷ்டிகரின் சித்தத்தைத் தங்கள் போதனைமூலம் சித்தரித்ததால், சிறைச்சாலை களையும், கொல்கொதாக் குன்றின் தியாக நாயகனை பிரசங்கித்ததால் கொலையுண்டு போவதையும் சகித்தார்கள் என நாம் வேதாகமப் பக்கங்களில் வாசிக்கையில் மெய்சிலிர்க்கும் காரியத்தை உணரமுடியும். உண்மைக்காய் உயர் துறப்போர் மிக அரிதாயிருக்கையில் பொய்க்காய் இத்துணை இனியவர்கள் தங்கள் இன்னுயிர்களையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் அள்ளிக் கொடுத்திருப்பார்களா? இயேசுவின் கல்லறைக்கு வந்த நீங்கள் இவைகளை உணர்ந்து, யோசித்துச் சொல்லுங்கள்.

பரலோகம் விட்டு நரர்லோகம் வந்த சரித்திர நடுநாயகன், சிலுவையில் தியாகச்சீலராக திகழ்ந்தார். அன்பின் திருவடிவமான நமதாண்டவர் அத்தோடு நிறுத்தாமல், தம்மைக் குறித்து கேள்விப்பட்டு; விசுவாசம் கொண்டு, மனந்திருந்தி, தான் தேவத்திருமைந்தன் என வாய்மொழிந்து அவரின் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டு இறுதிவரை நிலைத்திருந்தால் (ரோமர் 10:17, எபி.11:6, அப்:17:30,ரோமர் 10:9,10, ரோமர் 6:3,4,வெளி.2:10) அவர் அடைந்த மகிமையான உயிர்த்தெழுதலின் சாயலை நமக்குத் தருவார் என அறியும் போதுதான் அவரின் தயாளத்தின் தன்மையை ஆழமாய் உணரமுடிகிறது. வாலிபர்களாகிய நாம் உணர்வதோடு நிறுத்தாமல் நம் மறுமையின் வாழ்வு மலர இப்பொழுதே ஒப்பில்லாத அவருக்கு நம்மை ஒப்புக்கொடுப்போமாக!

## II.போய்ச் சொல்லுங்கள்

வெள்ளி அன்று பிற்பகல் மரித்த இயேசு ஞாயிறு வைகறை விடியலாய் விடிவெள்ளி உதிக்கும் நேரம், பாறைக்கல் விலக்கி நீதியின் பகலவனாய் மரித்தோரிடமிருந்து குறித்தநாளில் எழுந்தார் என்கிற செய்தி வாலிபராகிய நமக்கு வந்து பாருங்கள் என்ற அழைப்பு விடுத்ததோடு நில்லாமல் கண்ட இந்த கர்த்தரின் வல்லமையை போய்ச்சொல்லுங்கள் என பெரும்பொறுப்பொன்றை நமக்குத் தருகிறது. கல்லறைநோக்கி காரியமாய் வந்த மாதரிடம் விண்தூதன் "*சீக்கிரமாய்ப்போய் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்*" என்று கூறி நின்றான் (மத்.28:7).

மூடிய கல்லின் முத்திரையை மூன்றாம் நாளில் பனித்திரைபோல் விலக்கி எழுந்த நமதாண்டவரின் உயிர்ப்பை அறிந்த வாலிபர்களாகிய நாம் அதை அநேகரிடம் அன்பாய் எடுத்துச் சொல்லவேண்டும் என காலியான கல்லறை நமக்கு கட்டளையிடுகிறது. அது மனதறையில்போட்டு பூட்டி வைக்க வேண்டிய ஒன்றல்ல மாறாக உறங்கி கிடக்கும் இந்த உலகிற்கு இரட்சகர் உண்டென்று உரக்க ஒலியெழுப்ப வேண்டிய ஒன்று. ஒவ்வொரு நாளும் வாலிபர்களாகிய நாம், சொல்லிலும், செயலிலும் நாம் இரட்சகரின் உயிர்ப்பை உலகிற்கு உணர்த்திடல் வேண்டும்.

உயிர்த்த இயேசு உன்னதரிடம் திரும்புமுன் தமது சீடரிடம் உலகம் முழுவதும் சென்று நற்செய்தி கூறுங்கள் எனக்கட்டளையிட்டார் (மத்.28:18-20; மாற்.16:15,16) வெறுமையாய் கிடக்கும் அக்கல்லறையின் செய்தி வெறுமையான வாழ்க்கைகளை மாற்றுகிறது என்பதறிந்து அப்போஸ்தலர்கள் தங்கள் பிரசங்கங்களில் தேவபெலனாகிய சுவிசேஷம் உரைக்க தவறியதே இல்லை. ஆனால் துரதிஷ்டவசமாக கிறிஸ்தவர்களில் பலர் தேவனுக்காக போய்ச் சுவிசேஷம் சொல்லவேண்டும் என்கிற உணர்வே பெற்றுக் கொள்வதில்லை. வாலிபர்களாகிய நாம் இந்த உலகம் ஒரு வாடகை வீடு என்பதையும் , நமது சொந்தவீடு பரலோகத்தில் இருக்கிறதென்பதையும் அறிதல் நன்று.

இரண்டு மரியாள்களிடம் தூதன் அவர்தம் இருள் நீக்கி அருள்செய்தி சொல்லிய உடன் அவர்கள் "*பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறைவிட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு ஓடினார்கள்* "(மத்.28:8) அப்படி அவர்கள் செய்யும் போது இயேசு தாமே எதிர்பட்டு வாழ்க என்றார். வாலிபர்களே! அறியுங்கள்! தேவனின் கட்டளைகளை நாம் மகா சந்தோஷமாய் செய்யும்போது உலகத்தில் முடிவு பரியந்தம் நம்முடன் இருப்பேன் என்றவர் நம்மை வாழ்த்தி நம் பயம் நீக்கி அருள் புரிவார். இதை வாசித்த நாம் இச்செய்தி சொல்ல முற்றும் முடிய சமர்ப்பிப்போம் இன்றே புண்ணியரின் புகழ்பாட புறப்படுவோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✝

ஜே. பீக்கினஸ்

# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம்: ஆறு

வெளிப்படுத்தல் ஆறாம் அதிகாரமானது, இந்நூலில், புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமான பகுதியிலிருந்து தொடங்குகிறது. வெளிப்படுத்தல் நான்காம் அதிகாரம் 1,2 வசனங்களில், யோவான், ***இவைகளுக்குப்பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை*** காண்பிக்கும்படியாக, பரலோகத்திற்கு ஆவியிலே எடுத்துக்கொள்ளப்பட்டான். இவைக ளெல்லாம் சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள் (வெளி.1:1,2) இவைகள் ***உள்ளும், புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த*** ஒரு புத்தகத்தில் இடம்பெற்றிருந்தது (வெளி 5:1) இந்தப் புத்தகத்தை நோக்கிப்பார்ப்பதற்குக் கூட தகுதியுள்ளவர்கள் யாரும் காணப்படாதபடியால், ***இவைகளுக்குப்பின்பு சம்பவிக்க வேண்டி யவைகளைப்*** பார்க்கும்படியான யோவானின் நம்பிக்கை தகர்ந்தது. ஏமாற்றத்தினாலே அவன் அழுதான் (வெளி.5:3-4) ஆனால் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்து, அந்தப் புத்தகத்தை திறக்கப்பாத்திரராயிருந்தார் (5:5-14) இதை தொடர்ந்து வரும் 6முதல் 11 வரையுள்ள வசனங்கள், இந்தப் புத்தகத்தில் உள்ள ஏழு முத்திரைகள் உடைக்கப்படுவது சம்பந்தமான சம்பவங்களை விவரிக்கிறது.

வெளி 6:1ல் யோவான்,முதலாம் முத்திரை உடைக்கப்படுவதைக் கண்டார். ***அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று நீ வந்துபார் என்று இடிமுழக்கம் போன்ற சத்தமாய் சொல்லக் கேட்டுள்ளான்.*** முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்படும்போது நான்கு ஜீவன்களில் ஒன்று வந்துபார் என்று யோவானை அழைக்கிறது.அங்கு யோவான் பார்த்தது என்னவென்றால், ஒரு வெள்ளைக் குதிரை. அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப்பிடித்திருந்தான் அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது. அவன் ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான் (6:2) இது சரீரப் பிரகாரமான ஒரு யுத்தத்திற்குப் பிறகு கிடைக்கிற சரீரப்பிரகாரமான வெற்றியை விவரிக்கிறது. அல்லது இது ஒருவகையான ஆவிக்குரிய வெற்றியை விவரிக்கிறது. இது, இந்த இரண்டில் ஏதாவது ஒரு ஜெயமாகவே இருக்கவேண்டும். இதற்கு அடுத்த முத்திரை உடைக்கப்பட்டபோது என்ன நடந்ததென்று சொல்லப்பட்டிருப்பது இது சரீரப்பிரகாரமான யுத்தத்திற்குப் பொருந்துகிற மாதிரி இல்லை. ஆகவே இந்த முதலாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, வெள்ளைக்குதிரையின் மீது ஏறியிருந்தவன், ஆவிக்குரிய ரீதியில் ஜெயிப்பவனாகவே இருந்துள்ளான் என்று தோன்றுகிறது. இது கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்படுதலோடு தொடர்புடைய ஆவிக்குரிய வெற்றியாகவே இருக்கமுடியும் (வெளி.6:9-10)

பூமிக்குரிய எல்லா ஆயுதங்களைக் காட்டிலும், தேவனுடைய வார்த்தை அதிக வல்லமையுடையதாக இருக்கிறது (எபி.4:12) இந்த ஆவியின் பட்டயம் (எபி.6:17) வெற்றிகரமாக உலகத்தைக் கலக்கிற்று. (அப்.17:6) அநேக ஜனங்கள் இருளினின்று ஒளியினிடத்திற்குத் திருப்பப்பட்ட படியினாலே, சாத்தானுடைய ராஜ்ஜியம் அசைக்கப்பட்டு (அப்.26:18) பிசாசினுடைய கண்ணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் (2.தீமோ.2:26) கிறிஸ்துவின் சபையானது ஸ்தாபிக்கப்பட்ட கி.பி.30-ம் வருடத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்படுகின்ற காலம்வரைக்குமான சுமார் 66 வருட கால அளவில், சுவிசேஷமானது உலகெங்கும் பிரசங்கிப்பட்டு (கொலோ.1:6,23) இராயனுடைய அரண்மனையிலிருக்கிறவர்கள் உட்பட அநேகரை மனம் மாற்றியது (பிலி.4:22) சுவிசேஷத்தின் வல்லமையை யாரும் ஒருபோதும் குறைத்து மதிப்பிட முடியாது.

வெளி 6:3-ல் இரண்டாம் முத்திரையானது உடைக்கப்பட்டு, ***வந்துபார்*** என்று மீண்டும் யோவான் அழைக்கப்பட்டான். இந்தச் சமயத்தில், சிவப்பான வேறொரு குதிரையை யோவான் கண்டான். அந்த சிவப்புக் குதிரையின் மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளி6:4) முதலாம் முத்திரையானது, ஜெயங்கொள்ளும் படியாக, சுவிசேஷம் அறிவிக்கப்படுவதை விவரிக்குமானால், இதைத் தொடர்ந்துவரும் இரண்டாம் முத்திரையானது, தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப் படுவதால் எப்பொழுதும் உண்டாகும் சரீரபிரகாரமான துன்புறுத்தலைக் குறிக்கிறதாக இருக்க முடியும் அன்றியும் ***கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கமனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.*** (2தீமோத்.3:12) வசனத்தினிமித்தமாக எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உபத்திரவமும், துன்பமும் இருக்குமென்று இயேசு வாக்களித்துள்ளார்.(மத்.13:21) சுவிசேஷம் முதல் முறையாகப் பிரசங்கிக்கப்பட்ட காலத்திலிருந்து, பிரசங்கத்தைத் தொடர்ந்து உபத்திரவமும் வந்துள்ளது (அப்.1-4;5:40-42;7:5-7;8:4;12:1-3; 13:49-50;1 4:5-7;19:22) இந்நிலை எப்பொழுதும் இருக்கும்.வெளிப்படுத்தல் நூலை முதல் முறையாகப் பெற்றுக்கொண்டவர்கள், சபையானது, அதுவரை சந்தித்திராத மிக மோசமான துன்புறுத்தலை சந்தித்துக் கொண்டிருந்ததால், இதன் உண்மையை நிச்சயமாகவே அறிந்திருந்தார்கள்.

மூன்றாவது முத்திரையானது வெளி.6:5-ல் உடைக்கப்பட்டது. ***அப்பொழுது யோவான் ஒரு கறுப்புக் குதிரையையும், அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருப்பதையும் கண்டான். அப்பொழுது ஒரு பணத்திற்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்ச ரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து***

***உண்டான சத்தத்தையும் கேட்டான்*** (வெளி.6:5-6) அன்றைய நாட்களில் ஒரு பணம் என்பது ஒரு நாள் கூலியாகும். ஆகையால், இந்த வசனங்கல் கடுமையான பொருளாதார நிலையை விவரிக்கிறது. ஆனால், இது இயல்பான ஒரு சூழ்நிலை அல்ல, எப்படியெனில் ஒரு இயற்கையான பஞ்சத்தில், எல்லாப் பொருள்களின் விலையும் பாதிக்கப்படும் இங்கேயோ, ஒரு நாளின் தேவைக்கான கோதுமைக்கு ஒரு நாள் பணமும், ஒரு நாளைக்கான வாற்கோதுமைக்கு மற்றொரு நாள் பணமும் தேவைப்பட்டிருக்கிறது. ஆனால் கறுப்புக் குதிரையின் மேலிருந்த மனிதனுக்கு எண்ணெயையும், திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்று சொல்லப் பட்டிருந்தது. சேதப்படுத்தாதே என மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தைக்கு ***அநீதியாயிருத்தல்*** என்று பொருள். எண்ணெயும், திராட்ச ரசமும், ***அநீதியாகக் கையாளப்படக்கூடாது.*** இது கோதுமையும், வாற்கோதுமையும் அநீதியான விலைக்கு இருந்துள்ளதென்பதை காட்டுகிறது. ஆகையால், இவையனைத்தும் செயற்கையான, திட்டமிடப்பட்ட ஒரு பஞ்சத்தை விவரிக்கிறது. இயற்கையான பஞ்சங்கள் சரீரப்பிரகாரமான யுத்தத்தோடு தொடர்புடைதாயிருப்பதால் முதலாம் முத்திரையானது கண்டிப்பாக ஒரு சரீரப்பிரகாரமான யுத்தத்தைக் குறிக்கவில்லையென்பதற்கு இது சரியான சான்றாக உள்ளது. கோதுமை மற்றும் வாற்கோதுமையின் அநீதியான விலையானது அந்த நாட்களில் தேவனுடைய பிள்ளைகள் மீது திணிக்கப்பட்ட பொருளாதார துன்புறுத்துதலை விவரிக்கிறது. (வெளி.13:16-17-யும் பார்க்கவும்) மற்றெல்லாரையும் போல சந்தைவெளிகளில் போய் தங்களுக்குச் சாமான்கள் வாங்கும் உரிமை கிறிஸ்தவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவர்கள் தங்கள் அன்றாடத் தேவைகளுக்கு யானைவிலை, குதிரைவிலை என்று கொடுக்கவேண்டியிருந்தது. சரீரப்பிரகாரமான துன்புறுத்தல் கிறிஸ்தவர்களுக்குக் கெதிராக இன்றைக்கும் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

நான்காம் முத்திரையானது வெளி 6:7-ல் உடைக்கப்பட்டு,யோவான் மங்கின நிறமுள்ள ஒரு குதிரையையும், அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர் இருப்பதையும் கண்டான், பாதாளம் அவன் பின் சென்றது.பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும் படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது. (6:8) மரணத்துக்கும், பாதாளத்திற்குமான திறவுகோலை வைத்திருப்பவர் கிறிஸ்து ஒருவர் தான். (வெளி1:8) ஆகையால் இது ஒருவேளை சபையைத் துன்பப்படுத்து கிறவர்களுக்கான தேவனுடைய நியாயத்தீர்ப்பின் விவரிப்பாக இருக்கக்கூடும். பூமியின் காற்பங்கிலுள்ளவர்கள் தான் கொல்லப்பட்டார்கள் என்பது, இது உலகத்தின் முடிவில் நடக்கக் கூடிய இறுதி நியாயத்தீர்ப்பல்ல என்பதைக் குறிக்கிறது.

ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபொழுது, தேவ வசனத்தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்ட ஆத்துமாக்கள்,

***பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயதீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்கமலும் இருப்பீர்? என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்*** (வெளி.6:9-10) தேவனுடைய வார்த்தையினிமித்தம் கொல்லப்பட்டவர்களைக் குறித்து, இந்த ஐந்தாம் முத்திரை, மிகத் தெளிவாகப் பேசுவதானது நமக்கு ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது. அதாவது இதற்கு முந்தின முத்திரைகளின் தொடர் சம்பவங்கள் எல்லாம் கிறிஸ்துவின் வெற்றியான சுவிசேஷத்தை பிரசங்கித்ததிலிருந்து தொட்ங்கினதென்பதற்குச் சான்றாக உள்ளது. இந்த இரத்த சாட்சிகள், நீதியான பரிசுத்தவான்களுக்கான வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டார்கள்.(வெளி.19:7,8,14) அன்றியும், அவர்கள் தங்களைப் போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணி விடைக்காரரும், தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவேறுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது.(6:11) தேவரீர், பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு, செய்யாமலிருப்பீர் என்று கேட்டது குற்றமல்ல. இப்படிக் கேட்டதற்குப் பிறகு, அவர்களுக்கு வெள்ளையங்கி கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்து, அவர்கள் கேள்வி தவறானதல்ல என்று தெரிகிறது. நம்முடைய பகைவர்கள் அழிந்துபோகட்டும் என்று ஜெபிப்பதற்கு புதிய ஏற்பாட்டில் நமக்கு அங்கீகாரம் கொடுக்கப் படவில்லை. மாறாக, நம்முடைய பகைவர்களை நேசிக்கும்படியாகவும், ஆசீர்வதிக்கும்படியாகவும், அவர்களுக்காக ஜெபிக்கும்படியாகவும், அவர்களுக்கு நன்மை செய்யும்படியாகூவும் போதிக்கிறார்.(மத்.5:38-48; லூக்.6:27-36; 23:24; அப்.7:60; ரோம.12:17-21; 1தெச.5:15; 2தீமோ.4:16;யாக்.5:6). ஆகையால், இந்த இரத்தசாட்சிகள், யாரையும் அழிக்கும்படி தேவனிடத்தில் கேட்கவில்லை. கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி, மனந்திரும்பாமலிருக்கிற எல்லோரையும் பழிவாங்குவேன் என்று தேவன் வாக்குக்கொடுத்துள்ளார். (ரோம.12:19; பிலி.1:28;2தெச.1:4-10). பழிவாங்கும் வேலையை நாம் செய்யக்கூடாது. மாறாக நம்மைத் துன்பப்படுத்துகிறவர்கள், சுவிசேஷத்தைக் கேட்டு, தர்சு பட்டணத்து சவுலைப்போல மனந்திரும்புவதற்கு நாம் ஜெபிக்க வேண்டும். ஆனால்,மனந்திரும்பாதவர்கள் தேவனால் நியாயந் தீர்க்கப்படுவார்கள். வெளி.6:9-10 ல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டவர்கள், எப்பொழுது, நீர் கொடுத்த வாக்குத்தத்ததை நிறைவேற்றுவீர் என்று தேவனிடத்தில் கேட்கிறார்கள், அவ்வளவே.

ஆறாம் முத்திரை உடைக்கப்பட்ட போது, இதோ பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போல கறுத்தது. சந்திரன் இரத்தம் போலாயிற்று அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது அதின் காய்கள்

உதிருகிறது போல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. வானமும் சுருட்டப்பட்ட புத்தகம் போலாகி விலகிப்போயிற்று. மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்று போயின (வெளி.6:12-14) இந்த முத்திரை இறுதிகாலம் வரை முன்னே போகிறது. வசனம் 9-11ல் இரத்த சாட்சிகள் காத்திருக்கும்படியாகச் சொல்லப்பட்ட கொஞ்ச காலம் வரை செல்கிறது. இந்தக் காலத்தில் தான், தேவன் எல்லா துன்மார்க்கரையும் அவர்களால் கொல்லப்பட்ட பரிசுத்தவான்களின் இரத்தத்தையும் குறித்து நியாயத்தீர்ப்புச் செய்வார். வெளி.6:12-17 வசனங்கள் உலகத்தின் முடிவைக் குறித்தான தெளிவான விளக்கங்களைக் கொண்டுள்ளது. இயேசு மீண்டும் வரும்போது பூமியானது அழிக்கப்படும் (மத்.24:35;2பேது.3:1-4; வெளி.20:11).

கர்த்தர் வரும்போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள், கர்த்தரோடும், கிறிஸ்துவுக்குள் ரித்தவர்களோடும் இருக்கும்படியாக ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (1.தெச.4:13-18) வெளி.6:15-17 வசனங்கள், துன்மார்கர் அப்பொழுது என்ன செய்வார்கள் என்று சொல்லுகிறது ***பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரிய வான்களும், சேனைத் தலைவர் களும், பலவான்களும், அடிமைகள் யாவரும் சுயாதீனர் யாவரும் பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங் களையும், கன்மலைகளையும் நோக்கி; நீங்கள் எங்கள் மேல் விழுந்து சிங்காச னத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக் குட்டியான வருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள். அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது. யார் நிலை நிற்கக்கூடும் என்பார்கள்.***நான்காம் முத்திரை மற்றும் ஆறாம் முத்திரையில், நியாயத்தீர்ப்பு களுக்கிடையே ஒரு பெரிய வேறுபாட்டை நாம் காண முடியும். நான்காம் முத்திரையின் நியாத்தீர்ப்பில், பூமியின் காற்பங்கிலுள்ளவர்கள் மாத்திரம் கொல்லப்பட்டார்கள். அது ஒரு பகுதி நியாயத்தீர்ப்பு மட்டுமேயொழிய, எல்லா துன்மார்க்கருக்குமான முடிவான நியாயத்தீர்ப்பல்ல. ஆறாம் முத்திரையின் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக, ஒருவனும் நிற்க முடிவில்லை. துன்பப்படுத்தின ஒருவரும் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிபோக முடியவில்லை.இது, உலகத்தின் முடிவிலிருக்கும் எல்லா மனிதருக்குமான இறுதி நியாயத்தீர்ப்பாகும். துன்மார்க்கர் ஓடி ஒளிந்து கொள்ள முயற்சிப்பார்கள். ஆனால், அவர்கள் நரகத்தில் நித்தியகாலமாக, இருக்கும்படி தள்ளப்படுவதற்கு முன்பாக, நியாயந்தீர்க்கப் படும்படி, அதே நாளில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். (வெளி.20:12-15;21:8) எல்லா மனிதருக்கும் ஒரே ஒரு உயிர்த்தெழுதல் தான் இருக்கும் என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள் (யோவா.5:28,29;அப்:24:15) கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சி இருக்காது. யாருக்கும் இரண்டாம் வாய்ப்பு கொடுக்கப்படாது.

வெளிப்படுத்தின விசேஷம் 6-ம் அதிகாரத்தில் முதல் ஆறு முத்திரைகள் உடைக்கப்படுதல், கிறிஸ்தவர்களுக்கு மிகப்பெரிய ஆறுதலைக் கொடுக்கிறது. ஆம், நாம் துன்புறுத்தப்படுவோம். ஆனாலும், அவைகளுக்கு மத்தியிலும், நாம் தொடர்ந்து, இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து, கர்த்தருக்கு உண்மையாக ஊழியஞ்செய்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடக்கவேண்டும். இப்படிச் செய்து அதனடிப்படையில்,நாம் கொல்லப்பட்டாலும், வெற்றிக்கான வெள்ளையங்கி கொடுக்கப்பட்டு, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம். நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் துன்மார்க்கரைத் தண்டிப்பார் என்பதை அறிகிற அறிவின் மூலமாகவும் நாம் ஆறுதல் அடைய முடியும்.

கி.பி. முதலாம் நூற்றாண்டின் முடிவில், சர்வ வல்லமைபடைத்த ரோம சாம்ராஜ்யமானது, யாருடைய கட்டுப்பாட்டுக்கும், நியாயத்தீர்ப்புக்கும் அப்பாற்பட்டது என்ற எண்ணம் சிலருக்கு இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. நம்முடைய நாட்களிலும், நாம் அதே மாதிரியான ஒரு எண்ணத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக சோதிக்கப்படலாம். குறிப்பாக, நாம் உபத்திரவங்களைச் சந்திக்க நேரும்போது இந்த எண்ணம் வரலாம். ஆனால், தேவன் எல்லாவற்றையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பவராகவும், எல்லாவற்றின்மேலும் அதிகாரமுடையவராகவும் இருக்கிறார். ஒரு நாளில் எல்லா மனிதரையும் நியாயந்தீர்ப்பார். ***பூமியின் ராஜக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும் அதில் அடங்குவார்*** (வெளி.6:15) இதினிமித்தம் நாம் ஆறுதல்லடைந்து, தைரியம் பெற்று, நாம் வாழ்கின்ற ஒவ்வொரு நாளிலும், கர்த்தருக்கு உண்மையாகவும் ஊக்கமாகவும் ஊழியம் செய்து, நியாத்தீர்ப்பின் நாளுக்கு நம்மை ஆய்த்தமாக்குவோமாக!

**Jon Macon** **EZSR**

## ஞானஸ்நானம் பெற்ற பின் என்ன செய்ய வேண்டும்?

(லூக்கா 8:5-15)

1. தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். (மத்.6:33;22:37;10:37)
2. தேவனுடைய வேதத்தை தியானிக்க வேண்டும். (2தீமோத்.2:15;அப்.17:11)
3. தேவனுக்கு விசுவாசமுள்ளவர்களாய் கீழ்ப்படியவேண்டும்.(மத்.7:21)
4. தேவனோடு ஜெபத்தின் மூலமாய் பேச வேண்டும். (பிலி.4:6-7)
5. தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்.(யோவான் 4:24)
6. பிறருக்கு போதித்து இரட்சிப்பிற்குள் வழிநடத்த வேண்டும். (மத்.28:19-20)

## தெரிந்து கொள்ளுங்கள்

# கிறிஸ்துவின் சபை - பிரிவினைச் சபைகளில் ஒன்றல்ல.

நமது ரூபாய் நோட்டுகள் 1,2,5,10,20,50,100,500 என்று பலதரப்பட்ட பிரிவுகளைக் கொண்டவை என்பதை நாம் அறிவோம். இதை போலவே, மார்க்கரீதியில், பிரிந்து கிடக்கிற பல பிரிவினை சபைகளை நாமகரணக் கூட்டம் என அழைக்கிறோம். ஒரு நாமகரணக் கூட்டமென்பது ஒரு பட்டணம் அல்லது ஊரிலுள்ள ஒரு பிராந்திய கிறிஸ்துவின் சபையைக் காட்டிலும் பெரிதாக இருக்கலாம். ஆனால் மீட்கப்பட்டோரில் ஒட்டு மொத்தக் கூட்டத்தைக் காட்டிலும், அது மிக மிகச் சிறியதே. ஆகிலும் புதிய ஏற்பாடு, பிரிவுக் கூட்டமாகிய நாமகரணக் கூட்டத்தைப் பற்றிப் பேசாமல், பல இடங்களிலுள்ள கிறிஸ்துவின் சபையைக் குறித்து மட்டுமே பேசுகிறது. (1.கொரி.1:2). மேலும் இரட்சிக்கப்பட்டவர்களின் ஒட்டுமொத்த கூட்டத்தைக் குறித்தும் பேசுகிறது. (எபே.1:22,23) இப்படியாக புதிய ஏற்பாட்டுச் சபை எந்த ஒரு நாமகரணக் கூட்டத்தின் வடிவிலும் இருப்பதில்லை.

## கிறிஸ்துவின் சபை

### புதிய ஏற்பாட்டில் காணும் முதல் நூற்றாண்டு சபை

**1. ஒரு கவன ஆய்வு:** கிறிஸ்துவின் சபை என்பது(அ) யூதர்களின் ஜெப ஆலயமல்ல என்பதை தயவுசெய்து அறிந்துகொள்ளுங்கள். யூத மார்க்கத்திற்கு அடிகோலிய பழைய பிரமாணம் ஒழிக்கப்பட்டது. (ரோமர்.7:1-4; கொலோ.2:14-17; எபி.8:8-13). (ஆ) புரட்டஸ்டண்ட் அமைப்பை சேர்ந்த ஒரு பிரிவுக் கூட்டமல்ல. இன்று காணப்படும் அனைத்து நாமகரணக் கூட்டங்களும், கி.பி. 33ல் அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் ஸ்தாபிதம் பெற்ற நமது ஆண்டவரின் சபையிலிருந்து நூற்றுக்கணக்கான வருடங்கள் கழித்து உருவானவை (மாற்கு 9:1;அப்.2:1-4,47) இப்படிப்பட்ட நாமகரணக் கூட்ட அடையாளங்களின் அடிச் சுவடுகள் கூட கிறிஸ்துவின் சபையில் காணப்படுவதில்லை. புராட்டஸ்டண்ட் கூட்டங்களில் சில செயல்பாடுகளான ஜெப பீடம், ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தல், ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துதல், போன்ற செயல்களை கிறிஸ்துவின் சபையில் காண இயலாது. (இ) கிறிஸ்துவின் சபை ஸ்தாபிதம் பெற்ற பின். ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை இதிலிருந்து சுமார் 600 வருடங்கள் கழிந்து, கி.பி.606-ல் முழு கத்தோலிக்க சபையாகத் தோன்றியது. எனவே இப்பத்திரிக்கை வாயிலாக மாதந்தோறும் நாம் வாசிப்பவைகளிலிருந்து கத்தோலிக்கத்தின் மாம்சக் கண்ணோட்டமான உபதேசங்கள் உண்மை வேதத்தோடு (விவிலியத்தோடு) ஒத்துப்போவதில்லை என்பதை அறிந்துக்கொள்ளலாம்.

**2. சபையைக் குறித்த விளக்கம்;** ***சபை*** என்பது எக்லீசியா என்னும் கிரேக்கப் பதத்தில் அழைக்கப்பட்டவர்கள் கூட்டம் எனப் பொருள்படும். இப்படியாக சுவிசேஷத்தினால், உலகத்திலிருந்து பிரித்து அழைக்கப்பட்டு, அதற்குக் கீழ்படிந்த ஒரு கூட்ட மக்களைக் குறிக்கிறது. (2.தெச.2:14,1:7-9). கிறிஸ்து சபைக்கு ஒரே தலையாயிருந்து ஆளுகை செய்கிறார். (கொலோ.1:18) இந்த சபையில் ஆவியானவர் வாசம் பண்ணுகிறார்.(எபி.2:22,23).

3. சபை என்னும் பதம் எண்ணிக்கையிலும் ***ஒருமையில்*** *தான்* பேசுகிறது. ஒரே மந்தையாயிருக்கிறது. (யோவான்.10:16), சபையே அந்த மந்தை (அப்.20:28) ஒரே சரீரம் (எபே.4:4). சபையே அந்த சரீரம் (எபே.1:22,23) திருமண உடன்படிக்கையில் கர்த்தர் ஒரே மனைவியைக் குறித்துப் பேசுகிறார். (ரோமர்.7:1-4) சபையே அவருடைய ஒரே மனைவி (எபேசி.5:22,23).

முதல் நூற்றாண்டில் உண்மையான புதிய ஏற்பாட்டுச் சபையாக இருந்தது கிறிஸ்துவின் சபை மட்டுமே. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அதே அச்சடையாளங்களைக் காணலாம்.

| **முதல் நூற்றாண்டு சபை** | **இருபதாம் நூற்றாண்டின் சபை** |
| --- | --- |
| ***(அ) அழைக்கப்பட்ட விதம்:*** *கிறிஸ்துவின் சபை (ரோமர்.16:16) தேவனுடைய சபை (1.கொரி.1:2) கர்த்தருடைய சபை (அப்.20:28)* | ***(அ).இன்னும் இப்பெயர்களிலேயே சபை அழைக்கப்படுகிறது.*** |
| ***(ஆ)ஆளுகை அமைப்பு*** *மூப்பர்கள், உதவிக்காரர்கள், சுவி சேஷகர்கள் மற்றும் அங்கத்தினர்கள் (பிலி.1:1)* | ***(ஆ)இன்றுள்ள கிறிஸ்துவின் சபையிலும் மூப்பர் கள், உதவிக்காரர்கள், சுவி சேஷகர்கள், அங்கத்தினர்கள் என்று ஆளுகை அமைப் பையே காணலாம்.*** |
| ***(இ) ஆராதனை முறை:*** ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள்தோறும் கூடி ஆராதித்தனர் *(1.கொரி.16:2)* இசைக்கருவியில்லாமல் பாடினர். ஜெபித்தனர்,வசன உபதேசத்தைக் கேட்டபின் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றனர். காணிக்கை செலுத்தினர். | **(இ) இன்றும் கிறிஸ்துவின் சபை ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி ஆராதித்து, இசைக்கருவிகளில்லாமல் பாடல்களைப் பாடி ஜெபிக்கிறார் கள், காணிக்கை செலுத்து கிறார்கள்.** |
| **(ஈ) வழிகாட்டி:** அப்போஸ்தலருடைய உபதேசத்தையே அவர்களின் வழிகாட்டியாக கொண்டிருந்தனர் | (ஈ) இன்னும் கிறிஸ்துவின்சபை அப்போஸ்தலருடைய உபதேசத்தையே வழி |

*(அப்.2:42 ;கலா.1:6,7 வெளி.22:19)*

காட்டியாகக் கொண்டு உள்ளது. இதுவே புதிய ஏற்பாட்டு உபதேசம்.

*(உ).சபைக்குள் அங்கம் வகிக்க; விசுவாசித்தனர், மனந்திரும்பினர் கிறிஸ்துவை அறிக்கையிட்டனர். ஞானஸ்நானம் பெற்றனர். (அப்.8:26-40)*

*(உ).இன்னும் கிறிஸ்துவின் சபையிலும் மக்கள் விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று அங்கமாகின்றனர்.*

*(ஊ).ஊழியம்: சத்தியத்திற்கு ஆதாரமாக நடைபெற்றது. 1.தீமோ.3:15*

*(ஊ).இன்றுள்ள கிறிஸ்துவின் சபை சத்தியத்திற்கு ஆதாரமாகவே விளங்கி வருகிறது.*

***குறிப்பு:*** ஒரு பொருள் அதன் உதிரிப்பாகங்களின் தொகுப்பை பெற்றிருப்பதுபோல், கிறிஸ்துவின் சபையும் அநேக சபைகளுக்குள் ஒன்றுபோல் தோற்றமளிக்கலாம். ஆனால், இது மட்டுமே, ஒரே ஒரு புதிய ஏற்பாட்டுச் சபையாகும்.

நமது கர்த்தர் பெயருக்காக வந்த நாமகரணியல்ல. அவரது சபையும் அப்படிப்பட்டதே.

1. நமது கர்த்தர் பூமியிலே சஞ்சரித்த நாட்களில் அவர் எந்த பிரிவோடும் தன்னை இணைத்துக்கொள்ளவில்லை. நமது ஆண்டவர் பூமியிலே வாழ்ந்த நாட்களில் யூதர்களுக்குள் நான்கு விதமான கொள்கைகளையுடைய பிரிவினர் இருந்தனர். பரிசேயர்கள், சதுசேயர்கள், ஏரோதியர்கள் மற்றும் வேதபாரகர் என்பவர்களே. இவர்களில் ஒவ்வொரு வகையிலும் ஏதோ சில சத்தியத்தைப் பேசினாலும் நமது கர்த்தர் அவர்களில் யாரோடும் தம்மைச் சேர்த்துக்கொண்டு அடையாளப் படுத்தவில்லை. இது மிகவும் குறிப்பிடத்தக்கது.

2. மேற்கொண்டு சில குறிப்புகளை காண்போம்: (அ). நமது கர்த்தர் ஒற்றுமைக்காக ஜெபித்தார், பிரிவினை சபைகள் உருவாகக் கூடாது என்ற கருத்தில் அப்படி செய்தார்.(யோவான்.17:20,21)(ஆ)பிரிவினை சபைகள் உருவாகி ஒற்றுமை குலையக் கூடாது என்பதற்காகவே நமது ஆண்டவர் ஒற்றுமைக்காக கிரயம் செலுத்தினார். (எபே.2:16).பிரிவினை சபைகள் உருவாகாதபடிக்கு, நமது கர்த்தர் ஒற்றுமைக்காக மன்றாடினார். (1.கொரி.1:10) மேலும் (இ) பிரிவினை சபைகள் உருவாகாதபடிக்கு நமது கர்த்தர் திட்டமிட்டார்.(எபே.4:1-6). எனவே நமது கர்த்தர் பிரிவினை கூட்டத்தைச் சார்ந்தவருமல்ல, ஆகையால், கிறிஸ்துவின் சபையும் இப்படித்தான் இருக்க வேண்டும்.

தொடரும்.....

*தமிழில் E.A. ஆறுமுகம்*

# தேவையானது ஒன்றே

ஒரு முறை ஆண்டவராகிய இயேசு ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரை தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து ஆண்டவரே,நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்கு பிரதியுத்தரமாக; மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேக காரியங்களை குறித்துக் கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டெடுப்படாத நல்ல பங்கைத் தெரிந்துக் கொண்டாள் என்றார்.

இந்த சமயத்தில் இயேசுவை அன்பாய் ஏற்றுக்கொண்ட மார்த்தாள் அவர் மூலமாய் அவளுக்கு கிடைக்கபோகிற நன்மைகளை காட்டிலும் பற்பல வேலைகளை செய்வதிலே அதிக அக்கரையுடையவளாய் காணப்படுகிறாள். ஒருவேளை இயேசுவை உபசரிப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டிருப்பாளோ! ஆனால் இயேசுவோ மரியாளின் செயலையே ஒரு நல்ல மாதிரியாய் கூறியுள்ளார். இன்றும் ஆண்டவராகிய இயேசுவை தம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரையே தங்கள் மனதில் எப்பொழுதும் நினைத்து வாழ்பவர்களின் அநேகர் மார்த்தாளை போலவே இயேசுவின் மூலமாய் அவர்களுக்கு கிடைக்கும் மேலான ஆசீர்வாதங்களை குறித்து அக்கரையில் லாமல் இருப்பதை பார்க்கும்போது அது அக்கரையின்மை அல்லது அறியாமையா என்று என் மனம் அங்கலாய்கிறது. எனவே இந்த செய்தியிலிருந்து சில உண்மைகளை அறிந்து அவைகளை ஏற்றுக்கொள்வீர்கள் என்ற எதிர்பார்புடன் இக்கட்டுரையை எழுதுகிறேன்.

## இயேசுவின் பிறப்பு:

இயேசுவின் பிறப்பை பண்டிகையாக கொண்டாடும் வழக்கத்தை கிறிஸ்தவ மார்கத்தாரிடையே புகுத்தி மனுஷன் தன்னுடைய யூகத்தின்படி ஒரு நாளை குறித்து அந்த நாட்களில் செய்யப்படும் மாயையான சில செயல்களினால் மனுஷனுடைய மனதை மயக்கி வைத்துள்ளனர். எனவே கிறிஸ்துவின். பிறப்பை கொண்டாடுவதற்காக வீடுகளை சுத்தம் செய்து வர்ணம் பூசுவது, புத்தாடைகளை ஆயத்தம் செய்வது, சுவையான ஆகாரங்களை சமைப்பது, பல சிற்றின்பமான காரியங்களை செய்வது போன்ற பற்பல வேலைகளை குறித்தும் அதற்கான

பொருளாதாரத்தை குறித்தும் கவலைப்பட்டு கலங்குகிறவர்களாய் காணப்படுகிறார்கள். ஆதனால் அனேக குடும்பங்களில் சமாதானமற்ற நிலை ஏற்படுகிறது. ஆனால், இயேசு எதற்காக இந்த உலகத்திற்கு வந்தார் என்று கேட்டால் பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்று எல்லாரும் தெளிவாக கூறுவார்கள். ஆம்! பாவிகளான நம்மீது அன்பு கூர்ந்து நம்மை இரட்சிக்கும்படி நமக்காகவே இவ்வுலகில் வந்திருக்கும்போது நாம் இரட்சிப்படையும்படி அவர் உபதேசித்துள்ள வசனங்களை மரியாளை போல மனோ வாஞ்சையாய் ஏற்றுக் கொள்ளாமல் இயேசுவின் பிறப்பால் பற்பல காரியங்களை செய்வதில் வருத்தப்பட்டு கலங்க வேண்டிய அவசியமில்லை. இயேசுவின் பிறப்பால் நாம் இரட்சிப்படைவதே நம்மை விட்டு எடுப்படாத நல்ல பங்கு. இயேசு கூறுகிறார். ***விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைகுள்ளாகத் தீர்க்கப்படுவான்*** என்று (மாற்கு 16:16) இந்த வசனத்தை ஏற்றுக்கொண்டு கீழ்படி வதையே இயேசு எதிர்பார்கின்றார்.

தேவ மகிமைக்குரிய மனுஷர்களை பாவத்தின் அடிமைத்தனத் திலிருந்து மீட்கும் பொருட்டாக இயேசு மனுஷகுமாரனாய் இவ்வுலகில் பிரவேசிப் பதற்காக தேவன் மரியாளை தெரிந்து கொண்டார். ஆனால் மரியாளை தொழுது, மரியாள் மூலமாய் வேண்டுதல் செய்யும் வழக்கம் கிறிஸ்தவ மார்க்கத்தாரிடையே காணப்படுகிறது. ஆனால் இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரிலே நடந்த ஒரு கலியாணத்தில் திராட்ச ரசம் குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி அவர்களுக்கு திராட்ச ரசம் இல்லை என்றாள். அதற்கு இயேசு ***ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி; அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்றாள்.*** (யோவா.2:1-5) இயேசுவும், சிஷர்களில் சிலரும் ஒரு மலையின்மேல் ***தனித்திருக்கையில் ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேசகுமாரன இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்கு (இயேசுவுக்கு) செவிக்கொடுங்கள் என்று சத்தம் உண்டானது*** (மத்.17:7) ***நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்*** என்று இயேசு கூறுகிறார் (யோவா. 14:6) ***தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே எல்லாரையும் மீட்டும் பொருளாகத் தம்மை ஒப்பு கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே***என்று 1தீமோ.2:4,5 ல் பவுல் கூறிகிறார். எனவே இயேசு இவ்வுலகில் பிரவேசிக்க தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மனுஷரை தொழுது சேவிப்பது தேவனுடைய சித்தமல்ல. இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ள தேவையானது ஒன்றே, மரியாளை போல நல்ல பங்காகிய இயேசுவையே பற்றி கொள்ள வேண்டும். இதுவே தேவனுடைய சித்தம்.

## அற்புதம்

இயேசு தம்முடைய ஊழியத்தின் நாட்களில் அனேக அற்புதங்களை செய்தார். வியாதிகளை சுகமாக்கினார். அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் இதை அதிகாரத்தை கொடுத்தார் (மத்.10:1) ஆனால் அவர்கள் அற்புதங்களை செய்யும்படி கட்டளையிடாமல் ஆத்துமாக்களை இரட்சிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார் (மாற்.16:15) அவர்களோ புறப்பட்டு போய் எங்கும் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். (மாற்.16:20) அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யும்படி அநுகிரகம் பண்ணினார். (அப் 14:3) தேவன் தம்முடைய வசனத்திற்கு சாட்சியாய் அநுகிரகம் பண்ணினவைகளையே பிரகாசமாக செய்து பிரசங்கிக்க படவேண்டிய சுவிசேஷம் மறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்வதால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இம்மைகுரிய நம்மைகளுக்காவே அவரை தேட கூடியவர்களாயிருக்கின்றனர். நித்தியத்திற்குரிய இரட்சிப்பை அறியாதவர்களாகவும் அதை குறித்து கவலையற்றவர்களாயும் காணப்படுகிறார்கள். ஒருவன் எவ்வளவு கொடியதான வியாதியிலிருந்து குணமாக்கப்பட்டாலும் அந்த சரீரம் மண்ணுக்கு தான் திரும்புகிறது. அதனால் அவனுடைய அத்துமாவுக்கு நன்மையேதுமில்லை. அற்புதம் ஆத்துமாவை இரட்சிப்பதில்லை. ***எனவே அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன். தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்த நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்.*** எபி.1:4 எனவே தேவையானது ஒன்றே அநித்தியமான உலக மேன்மைக்கு ரியவைகளை காட்டிலும் நித்தியமான வாழ்வளிக்கும் இரட்சிப்பின் சுவிசேஷவுமே நம்மைவிட்டு எடுப்படாத நல்ல பங்கு.

## சிலுவை

சிலுவை கிறிஸ்தவ மார்க்கத்தின் அடையாளமாகவும் புனித சின்னமாகவும் கிறிஸ்தவ மார்க்கத்தாரிடையே கருதப்படுகிறது. ஒருவேளை கிறிஸ்து மட்டுமே சிலுவையில் மரித்திருப்பாரனால் இக்கூற்று ஏற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும். இயேசுவோடு இரண்டு கள்வர்களையும் சிலுவையில்தான கொலைசெய்தார்கள்.சிலுவை, இக்கள்ளவர்களை போன்ற குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும் ஒரு கொலை கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

பாவத்தின் அடிமைதனத்தில் சிக்குண்டு தவிப்போரை மீட்கும் பொருளாக தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை பாவ நிவாரண பலியாக சிலுவையின் பாடுகளுக்கு ஒப்புக்கொடுத்து அவர் சிந்தின இரத்தத்தின் மூலம் மனுகுலத்திற்கு மீட்பின் திட்டத்தை ஏற்படுத்தினார். நம்முடைய மீறுதல் களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்று ஏசா 53:5-ல் இயேசுவின் மரணத்திற்கான முகாந்திரத்தை ஏசாயா தீர்க்கன் தெளிவாக கூறியுள்ளார். இயேசுவை விசுவாசிக்கின்றோம் அவரை நேசிக்கின்றோம் என்பவர்கள் இத்தனை பாடுகளை அனுபவித்த அவர் நம்மை இரட்சிக்கும்படி உபதேசித்துள்ள வசனங்களை விசுவாசியாமல் இருப்பது இயேசுவை நிராகரித்து பரபாஸை ஏற்றுக்கொண்டது போல் உள்ளது. சிலுவையில் மரித்த இயேசுவையும் அவர் நம்மை மீட்கும்படி உபதேசித்த வசனங்களையும் ஏற்றுக்கொள்ளாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டு அதை தங்கள் கருத்துக்களில் வைத்து அதை நமஸ்கரிப்பதிலும் அக்கரையுடைய வர்களாய் காணப்படுகிறார்கள். இயேசு கொலை செய்யப்பட்ட சிலுவை ஒருவரையும் இரட்சிப்பதில்லை. எனவே தேவையானது ஒன்றே சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவையும் நம்மை இரட்சிக்கும்படி அதை உபதேசித்துள்ள வசனங்களையும் ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிவதே நம்மை விட்டெடுப்படாத நல்ல பங்கு.

நீங்களும் மரியாளைபோல் பாக்கியமுள்ளவர்களாய் இருக்க தேவன் கிருபை செய்வார்.

*சகோ. ஹென்றி மோகன்*

## கொலோசே பட்டணம் பற்றி....

கொலோசே பட்டணமானது ,லவோதிக்கேயாவிலிருந்து பதினொரு மைல்கல் கீழ்த்திசையில், லைகாஸ் என்னும் பள்ளத்தாக்கில் அமைந்திருந்தது. எபேசுவிலிருந்து யூப்ரேட்டஸ் செல்லும் கிழக்கு மேற்கு வணிக பாதையில் அமைந்திருந்ததால், பதினெட்டாம் நூற்றாண்டு வரை இப்பட்டணம் தனித்துவம் வாய்ந்ததாகவும் லாபகரமானதாகவும் இருந்தது. அந்தப் பாதையில் மாற்றம் ஏற்பட்டபோது, அது லவோதிக்கேயாவுக்கு மிகவும் பயனுள்ளதாக மாறியது. துருக்கியர் 12ம் நூற்றாண்டில் கொலோசே பட்டணத்தை அழித்து அதைப் பாழாக்கினர்.

கி.பி. 1835ம் ஆண்டில் வில்லியம் ஜே. உறாமில்டன் என்பவர் பாழக்கப்பட்ட அந்தப்பட்டணம்தையும், அதன் கோட்டையையும் அறிந்து, பின்பு அதைக்குறித்து ஆராய்ந்து அதைக் கண்டுபிடித்தார். அவர் பல பளிங்கு தூண்களையும், பாழர்க்கப்பட்ட கலைக்கூடத்தையும் அதில் பாதுகாக்கப்பட்ட அநேக இருக்கைகளையும், குகைகளாலான கல்லறைகளையும் கண்டறிந்தார்.

புதைபொருள் ஆராய்ச்சியில் ஒரு சில நினைவு பொருட்களும், சில நாணயங்களும், ஒரு பழமை வாய்ந்த சபை கட்டடமும் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தகவல் கொஞ்சமாயிருப்பினும் பவுல் எழுதிய நிருபத்திற்கு இது இன்னும் மெரு கேற்றுகிறது.

# இடறுதற்கான கல்

வேதாமத்தில் "*இடறுதற்கான கல்*" என்பது ஒரு மனிதன் கால் இடறி விழக்கூடிய ஒரு பொருளாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக்கல் அழிவுக்கும், வெறுப்புக்கும் காரணமாயிருக்கிறது (ஏசா.57:14) செப்பனியா தீர்க்கனின் காலத்தில் விக்கிரக வழிபாடு யூதர்களைத் தேவ கிருபையிலிருந்து விழும்படியான இடறுதலின் கல்லாக அமைந்தது. (செப்.1அதி.;எசே.7:19) அவர்களின் விக்கிரகங்கள் ஜீவனற்றதாகவும், வல்லமை அற்றதாகவும் இருந்ததினால் அவர்களை இரட்சிக்க கூடாதுபோயிற்று.

விக்கிரக ஆராதனை என்றால் என்ன? தெய்வீக கனத்தை, சிருஷ்டியான சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கல்கள், மரங்கள், மனிதர்கள், பணம் போன்றவைகளுக்கு கொடுப்பதே விக்கிரக வழிபாடாகும். சாத்தானுடனான போராட்டத்தில் இயேசு, "***.... உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.***" (மத்.4:10) அப்போஸ்தலனாகிய யோவான், தேவ தூதனை பணியப் போகும்போது, அவனை எச்சரித்த தூதன் "***நீ இப்படிச் செய்யாதபடிக்குப்பார். உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங் கூட நானும் ஒரு ஊழியக்காரன், தேவனைத் தொழுதுகொள் என்றான்***" (வெளி.22:9).

உண்மையில் மேசியாவைக் குறித்தான, யூதர்களின் முன் நிர்ணய எண்ணத்திற்கு இயேசுவின் வார்த்தையும், செயலும் ஒத்ததாயிராததால் இயேசு அவர்களுடைய இடறுதற்கான கல்லானார். (ரோமர்.9:32;1பேதுரு.2:8).

ஏசாயா தீர்க்கனின் காலத்தில் தேவன் இஸ்ரவேலருக்குஇடறுதற்கான கல்லாக இருந்தார். என்னவெனில் அவர்கள் தங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையும் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரும், நிறைக்கிறவருமான தேவன் மேல் வைக்காமல், அதற்கு மாறாக விக்கிரகத்தின்பால் வைத்தார்கள். (ஏசா.8:13-15) (ஏசாயா.57:3-5; 14:15,20).

இந்த நவீன உலகிலும், அநேக இடறுதற்கான கல்களை உருவகப் பார்வையால் காணமுடியும். அதில் சில தான் என்ன?

1. உண்மையும், நேர்மையும் கொண்ட அநேகருக்கு, ஒரே சபை, இயேசு ஸ்தாபித்த சபை, வேதாகமத்தில் கூறப்பட்ட ஒரே சபை இடறுதற்கான கல்லாக மாறி இருக்கிறது. ஆனால் அது அப்படி இருக்கக் கூடாது. (மத்.16:18-19; அப்.20:28; எபே.4:4-6; ரோமர். 16:16). உங்கள் வேதாகமம் சபையைக் குறித்து என்ன சொல்லுகிறதோ அதை ஏன் ஏற்கக்கூடாது? எந்த வகையிலும், வடிவிலும் பிரிவினை சபையானது உங்கள் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. இயேசு தன்னை பின்பற்றுபவர்கள் பிரிந்திருக்க விரும்புவதில்லை, மாறாக அவர்கள் ஒன்றாயிருக்க விரும்புகிறார்.

(யோவான்.17:20-23; 1.கொரி.1:10;எபே.4:1-6;1.கொரி.11:18). ஒரு பிரபலமான பிரசங்கியார் ஜெபிக்கும்போது, ***"இந்த மார்க்க பேதங்களுக்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன், ஏன் என்றால் நம் ஒவ்வொருவரின் விருப்பத்திற்கேற்ற சபைகளை நாம் உடையவர்களாயிருக்க வழிவகுக்கிறது."*** இது என்றார் நண்பர்களே! இயேசு இப்படிப்பட்ட ஜெபத்தை. ஒருபோதும் ஏறெடுத்திருக்கமாட்டார். பிரிவினைச் சபைகளை நியாயப்படுத்துவது இயேசுவின் முகத்தில் ஓங்கி அறைவதாகும்.

சில ஞான வார்த்தைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கிறது பாருங்கள். வேதாகமத்தைப் பொருத்தளவில் ஒரே உண்மை சபை இருக்கிறது. ஆனால் வேத்தில் சொல்லப்படாத மாற்று ஏற்பாட்டுச சபைகள் அநேகம் உண்டு.


கிறிஸ்துவின் சபை தனித்தன்மை வாய்ந்தது. எதன் அடிப்படையில்? உன்னததேவனை ஆராதிக்கிற விஷயத்தில் கிறிஸ்துவின் சபையானது போதிப்பதானாலும், செய்வதானாலும் வேதாகமத்தை, முழு வேதாகமத்தை, அடிப்படையாக கொண்டிருக்கிறது. வேதாகமத்தை தவிர வேறொன்றையும் அடிப்படையாக கொண்டிராது. தேவன் கட்டளையிட்டவைகளிலிருந்து கூட்டவோ குறைக்கவோ கூடாது என நாம் போதிக்கப்படுகிறோம். (வெளி.22:18-19; உபா.4:2; 12:32; நீதி 30:6).

அன்புகுரிய நண்பர்களே! வேதாகம சபை பற்றிய விஷயத்தில் இடறி விழாதிருங்கள். கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களான நாங்கள், இயேசுவின் உயர்த்தெழுதலுக்குப்பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்ட. புதிய ஏற்பாட்டுச் சபையின் பழமையான, எளிமையான காரியங்களை எங்கள் நாட்களில் மீட்டமைக்க விரும்புகிறோம். (அப்.2:1-47;லூக்கா.8:11) வேதவசனமாகிய அந்த விதையை இப்பொழுது விதைத்தாலும், அப்பொழுது என்ன கனி கொடுத்ததோ அதையே இன்றும் கொடுக்கும். (லூக்கா.8:11;1.பேதுரு.1:22-23).

2.தண்ணீர் ஞானஸ்நானம் என்ற கர்த்தருடைய கட்டளையைக் குறித்து ஒருவரும் ஒருக்காலும் இடறி விழக்கூடாது. ஆனாலும் எண்ணிலடங்கா ஆயிரங்களில் பலர் இப்படி விழுகிறார்கள். கர்த்தருடைய கட்டளையான ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கவேண்டும் எனக் கங்கனம் கட்டிக்கொண்டு அநேக பிரசங்கியார்கள் தங்கள் நேரங்களை நகைக்கதக்க விவாதங்களை செய்ய செலவிட முற்படுகிறார்கள். (யோவான்.3:3-5; எபே.5:26; தீத்து.3:5; அப்.22:16)

ஞானஸ்நானத்தைக் குறித்து நாம் ஏன் இடறவேண்டும்? கர்த்தருடைய கட்டளைக்கு ஏன் நாம் எதிர்த்து நிற்க வேண்டும்? (அப்.10:48; மத்.28:18-20; மாற்கு.16:15-16;1.பேதுரு.3:20-21). இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வில்லையா? (மத்.3:13-17). இயேசு, பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ளும்படி

(தொடரும்.....) **W.A. Holley**



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**இயக்குநர்,**

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**

த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**